TAMIL LEXICON

Published under the authority of the
University of Madras

VOL. VI. PART II

மொ—வ.

MADRAS
PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE

1934

Copyright

Price Rs. 2

மொய்[2] moy, n. <மொய்[1]-. 1. Press, throng, swarm; நெருக்கம். மொய்கொண்ட மாக்கள (மணி. 19, 136). 2. Company, assembly, crowd; கூட்டம். (பிங்.) 3. Closeness, tightness; இறுகுகை. மொயவளம பூதத முயக்கம (பரிபா. 18, 18). 4. Greatness, excellence; பெருமை. மொய சிறைக்கு மொற்றுமை யின்மை (நான்மணி. 23). 5. Strength; வலிமை. மொய்வளஞ் செருக்கி (பதிற் றுப். 49, 8). (பிங்.) 6. Battle, war; போர். மொய்தாங்கிய முழுவலித் தோள (பு. வெ. 8, 28, கொளு). (சூடா.) 7. Battle-field; போர்க்களம். (பிங்.) மொய்த் தலைத்தனில் . . . முடுகினனே (இரகு. திக்கு. 87). 8. Enemy; enmity; பகை. மொய்யவிரிய (பு. வெ. 3, 5). 9. Elephant; யானை. (பிங்.) 10. Bee; வண்டு. (சூடா.)

மொய்[3] moy, n. cf. மோய். Mother; தாய். (அக. நி.)

மொய்[4] moy, n. cf. மொயின். 1. [K. muy.] Presents given on special occasions, as at a wedding; விவாக முதலியவற்றில் வழங்கும் நன்கொடைப்பணம். Colloq. 2. Contribution, as to a charity; மகமை. Loc.

மொய்[5]-த்தல் moy-, 11 v. tr. prob. மொய்[4]. To give, bestow; கொடுத்தல். (அக. நி.)

மொய்க்கணக்கு moy-k-kaṉakku, n. <id.+. List of presents made on marriage or other special occasions; விவாக முதலியவற்றில் வழங்கும் நன்கொடைகளின் குறிப்பு.

மொய்கதிர் moy-katir, n. prob. மொய்[3]+. 1. Nipple of woman's breast; teat of animal; முலைக்காம்பு. (நிகண்டு.) 2. Breast; udder; முலை. (சது.)

மொய்த்தாய் moy-t-tāy, n. <id.+. Mother; தாய். (யாழ். அக.)

மொய்தாய் moy-tāy, n. See மொய்த்தாய். (யாழ். அக.)

மொய்ப்பணம் moy-p-paṇam, n. <மொய்[4] +பணம்[2]. See மொய்[4].

மொய்ம்பன் moympaṉ, n. <மொய்ம்பு. Warrior; வீரன். வாளி . . . மொய்ம்ப ரகலங்களைக் கிழித்து (கம்பரா. முதற்போ. 145).

மொய்ம்பு moympu, n. prob. மொய்[1]-. [K. muyvu.] 1. Strength, valour, prowess; வலிமை. முரண்சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் (குறள், 492). 2. Shoulder; தோள். பூந்தாது மொய்ம்பின வாக (கலித். 88.)

மொய்யற்சன்னி moyyaṟ-caṉṉi, n. prob. id.+. Catalepsy. See முடுசன்னி. (யாழ். அக.)

மொய்யெழுத்து moy-y-eḻuttu, n. <மொய்[4]+. Deed of endowment for a charitable purpose; தருமசாஸனம். (யாழ். அக.)

மொய்யெழுது-தல் moy-y-eḻutu-, v. <id. +. tr. 1. To give presents on marriage or other special occasions; மணமுதலியவற்றில் நன்கொடை யளித்தல். 2. To subscribe small sums to a charity; தருமத்திற்குச் சிறுதொகை உதவுதல் (W.) 3. To write off, as irrecoverable; கொடுத்துத் திரும்பக்கிடையாதனவற்றைச் செலவாக எழுதுதல். —intr. To make a list of presents given on marriage or other special occasions; விவாக முதலியவற்றில் அளிக்கும் நன்கொடைகளைப் பதிவு செய்தல்.

மொய்யெனல் moy-y-eṉal, n. Expr. signifying (a) slowness; மந்தக்குறிப்பு. (சூடா.): (b) sourness; புளித்தற்குறிப்பு. Colloq.

மொயின் moyiṉ, n. A payment or contribution, as to a temple. See மோகினி[2]. (R. T.)

மொயினி moyini, n. A payment or contribution, as to a temple. See மோகினி[2]. (R. T.)

மொரசுபறையன் moracu-paṟaiyaṉ, n. prob. முரசு+. A division of the Paraiya caste, said to have migrated from Canara to the Tamil country; கன்னடதேசத்திலிருந்து தமிழ்நாடு புகுந்த பறையர்வகை. (E. T. v, 80.)

மொரமொர-த்தல் moramora-, 11 v. intr. 1. To rustle; முறுக்கா யொலித்தல். 2. To be neat. See முறமுற-, 1. 3. To be rough or stiff; to be crisp. See முறமுற-, 2.

மொரமொரப்பு moramorappu, n. <மொர மொர-. 1. Rustling; முறுக்காயொலிக்கை. 2. Cleanliness. See முறமுறப்பு, 1. 3. Roughness; crispness. See முறமுறப்பு, 2.

மொரமொரெனல் moramoreṉal, n. Onom. expr. of (a) rustling; முறுக்காய் ஒலித்தற் குறிப்பு: (b) being clean. See முரமுரெனல். (சங். அக.)

மொருமொரு-த்தல் morumoru-, 11 v. intr. 1. To murmur; to grumble. See முறுமுறு-. 2. See மொரமொர-.

மொருமொரெனல் morumoreṉal, n. 1. See மொரமொரெனல். (சங். அக.) 2. Onom. expr. of grumbling; முணுமுணுத்தற் குறிப்பு.

மொல்லமாறி mollamāṟi, n. cf. முல்லை மாறி. [T. mullemāri.] 1. Pickpocket; முடிச் சவிழ்க்கி. 2. Dishonest person, deceiver; புரட்டன்.

மொல்லு mollu, n. Noise made with hands and feet, preparatory to a fight; சண்டைக்குமுன் கைகால்களைத் தட்டிச்செய்யும் ஆரவாரம். (W.)

மொல்லுமொல்லெனல் mollu-mollenal, n. Onom. expr. signifying noisy clamour; இரைச்சற் குறிப்பு. (சங். அக.)

மொல்லை mollai, n. Aries of the zodiac. See மேடம்[1], 2. (சூடா. உள். 9.)

மொலான் molān, n. < E. Melon. See முலாம்பழம். *Loc.*

மொலு molu, n. See மொல்லு. (யாழ். அக.)

மொலுமொலு-த்தல் molumolu-, 11 v. intr. 1. See மொருமொரு-, 1. (சங். அக.) 2. To chatter; விடாது பேசுதல். 3. To clamour; இரைதல்.

மொலுமொலெனல் molumolenal, n. Onom. expr. of (a) chattering; விடாதுபேசற் குறிப்பு· (b) noisy clamour; இரைச்சற் குறிப்பு: (c) grumbling; முணுமுணுத்தற்குறிப்பு: (d) itching sensation; தினவெடுத்தற்குறிப்பு சிரங்கு மொலுமொலென்று அரிக்கிறது: (e) scratching; சொறிதற் குறிப்பு. (W.)

மொழச்சு-தல் molaccu-, 5 v. tr. prob. மழி-. To shave. See மழி-. *Loc.*

மொழி[1]-தல் moli-, 4 v. tr. To say, speak; சொல்லுதல். மனத்தொடு வாய்மை மொழியின் (குறள், 295).

மொழி[2] moli, n. < மொழி-. 1. Word; சொல். மறைமொழி தானே மந்திர மென்ப (தொல். பொ. 481). 2. Saying, maxim; கட்டுரை. பழமொழி. 3. Language, speech; பாஷை. மொழிபெயர் தேஎத்த ராயினும் (குறுந். 11). 4. (Legal.) Deposition; வாக்குமூலம். *Nāñ.* 5. Meaning, sense; பொருள். இனமொழி (தொல். பொ. 480).

மொழி[3] moli, n. cf. விழி. [K. moṇa.] 1. Joint, as of wrist, knee, ankle, etc.; மணிக்கட்டு முழங்கால் கணைக்கால் முதலியவற்றின் பொருத்து. 2. Joint where a twig branches off from the stem; மரமுதலியவற்றின் கணு. மொழிவு மினியீர . . . மதுரக் கழைகாள் (அழகர்கல. 67).

மொழிக்கட்டு moli-k-kaṭṭu, n. < மொழி[3] +. Stiffness of joints, *Anchylosis;* உடற்பொருத்திற் காணுந் திமிர். (M. L.)

மொழிச்சாரியை moli-c-cāriyai, n. < மொழி[2] +. (Gram.) Particle, augment consisting of two or more letters; இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வெழுத்துக்களால் ஆகிய சாரியை. (நன். 252, மயிலை.)

மொழிதடுமாறு-தல் moli-taṭumāṟu-, v. intr. < id +. (யாழ். அக.) 1. To stammer; திக்கிப்பேசுதல். 2. To err, hesitate or stumble in reading, reciting, etc.; வாய் குழறுதல்.

மொழிந்ததுமொழிவு molintatu-molivu, n. < மொழி- + மொழி-. (Rhet.) Tautology. See கூறியதுகூறல். (தண்டி. 102)

மொழிநூல் moli-nūl, n. < மொழி[2] +. Philology; மொழியியலாற்றைக் கூறும் சாத்திரம். *Mod.*

மொழிப்பிசகு[1] moli-p-picaku, n. < id. +. Failure to keep one's word, வாக்குத்தவறுகை.

மொழிப்பிசகு[2] moli-p-picaku, n. < மொழி[3] +. Dislocation of joints; உடற்பொருந்து இடம் விட்டு விலகுகை.

மொழிப்பொருள் moli-p-poruḷ, n. < மொழி[2] +. 1. Significance or meaning of a word; சொற்கு ஏற்பட்ட பொருள். மொழிப்பொருட் காரணம் (தொல். சொல். 391). 2. Word or utterance foreboding good or ill; நிமித்தச்சொல். நிமித்த மொழிப்பொருள் தெய்வம் (தொல். பொ. 36) 3. Mantra; மந்திரம். மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகென (சிலப். 10, 100).

மொழிபிசகு[1]-தல் moli-picaku-, v. intr. < id. +. To fail in keeping one's word; வாக்குத்தவறுதல்.

மொழிபிசகு[2]-தல் moli-picaku-, v. intr. < மொழி[3] +. To suffer dislocation in joints; உடற் பொருந்து இடம்விட்டு விலகுதல்.

மொழிபிறழ்[1]-தல் moli-piṟaḻ-, v. intr. < மொழி[2] +. See மொழிபிசகு[1]-.

மொழிபிறழ்[2]-தல் moli-piṟaḻ-, v. intr. < மொழி[3] +. See மொழிபிசகு[2]-.

மொழிபெயர்-த்தல் moli-peyar-, v. tr. < மொழி[2] +. To interpret, translate; நூல் முதலியவற்றை வேறுபாஷையில் மாற்றி யமைத்தல். மொழிபெயர்த் ததர்ப்பட யாத்தல் (தொல். பொ. 652).

மொழிபெயர்தேயம் moli-peyar-tēm, n. < id. + பெயர்[2]- +. Foreign country, as the place where the language is different; பாஷாந்தரம் வழங்கும் நாடு. மொழிபெயர் தேஎத்தராயினும் (குறுந். 11).

மொழிபெயர்ப்பு moli-peyarppu, n. < id. +. Translation; interpretation in another language; பாஷாந்தரப் படுத்துகை. (நன். 50.)

மொழிமாற்று moli-māṟṟu, n. < id. +. (Pros.) Mode of construing a verse in which the words have to be transposed for the ascertainment of its proper meaning, one of eight *poruḷ-*

kōl, q.v.; பொருள்கோளெட்டனுள் ஏற்றபொருளுக்கு இயையுமாறு மொழிகளை மாற்றிப் பொருள்கொள்ளும் முறை. (நன். 413.)

மொழிமாறுவோலை moḻi-māṟā-v-ōlai, *n.* <id.+. (Legal.) Deed whose terms cannot be revoked; மாற்றுங் கருத்தில்லாத நிபந்தனையுடைய சாஸனம்.

மொழிமுறித்தான்காய்ச்சல் moḻi-muṟittāṉ-kāyccal, *n.* <மொழி³+முறி²-+. Dengue; முடக்குச்சுரம்.

மொழிமை moḻimai, *n.* <மொழி². Proverb; பழமொழி. (பிங்.)

மொழியன் moḻiyaṉ, *n.* perh. மொழி³. Large louse; பெரிய பேன். (யாழ். அக.)

மொழியிடையெழுத்து moḻi-y-iṭai-y-eḻuttu, *n.* <மொழி²+இடை¹+. (Gram.) Letters capable of succeeding a consonant in the middle of a word; சொல்லின் நடுவில் வேற்றுநிலை மெய்ம்மயக்காகவும் உடனிலைமெய்ம்மயக்காகவும் வரக்கூடிய எழுத்துக்கள். (W.)

மொழியிறுதி moḻi-y-iṟuti, *n.* <id.+. See மொழியீற்றெழுத்து. (W.)

மொழியீற்றெழுத்து moḻi-y-īṟṟeḻuttu, *n.* <மொழியீறு+. (Gram.) Final letter of a word; சொல்லின் முடிவில் வரும் எழுத்து. (W.)

மொழியீறு moḻi-y-īṟu, *n.* <மொழி²+ஈறு¹. See மொழியீற்றெழுத்து. (W.)

மொழியொலிக்குறிப்பு moḻi-y-oli-k-kuṟippu, *n.* <id.+. Tone, emphasis; சொல்லின் அழுத்தமான உச்சரிப்பு. (W.)

மொழியோசை moḻi-y-ōcai, *n.* <id.+. Pronunciation; உச்சரிப்பு. (W.)

மொழுக்கன் moḻukkaṉ, *n.* cf. மழுங்கன். 1. Plain jewel without elaborate or fine engraving or filigree work; வேலைப்பாடில்லாத ஆபரணம். *Loc.* 2. Plain workmanship; சாதாரவேலை. (யாழ். அக.) 3. Stout man; தடித்தவன். (யாழ். அக.)

மொழுக்கன்மோதிரம் moḻukkaṉ-mōtiram, *n.* <மொழுக்கன்+. Plain ring; பூவேலை முதலியன செய்யப்படாத மோதிரம். (W.)

மொழுக்கனோலை moḻukkaṉ-ōlai, *n.* <id. +. Woman's plain ear-ring made of gold and not set with gems; கல்வைத்து இழைக்காது தங்கத்திற்செய்த சாதாரக் காதோலையணி. (W.)

மொழுக்கு-தல் moḻukku-, 5 *v. tr.* See மொழுக்குமரமடி-. *Nāñ.*

மொழுக்குமரம் moḻukku-maram, *n.* <மொழுக்கு-+. Harrow, drag. See பரம்பு², 1. *Nāñ.*

மொழுக்குமரமடி-த்தல் moḻukku-maram-aṭi-, *v. tr.* <மொழுக்குமரம்+. To level ploughed land by a harrow or drag. See பரம்படி-. *Nāñ.*

மொழுக்கெனல் moḻukkeṉal, *n.* Onom. expr. of (a) breaking suddenly, as a dry branch; சடக்கென ஒடிகைக் குறிப்பு. (சங். அக.): (b) being greasy; எண்ணெய்ப்பசையாயிருத்தற் குறிப்பு.

மொழுங்கன் moḻuṅkaṉ, *n.* See மொழுக்கன். (சங். அக.)

மொழுப்பு¹-தல் moḻuppu-, 5 *v. tr.* <மழுப்பு-. To protract, as a business; to delay, put off on frivolous pretences; to evade; காரியத்தை மழுப்புதல். (W.)

மொழுப்பு² moḻuppu, *n.* [K. *modupu.*] 1. Tie, knot; சட்டு. சடைமொழுப பவிழ்ந்து (திருவிசைப. கருவூ. 8, 1). 2. Locality abounding in gardens; சோலை செறிந்த பிரதேசம். சோலைசூழ் மொழுப்பில் (திருவிசை. கருவூ. 1, 5).

மொழுமொழு-த்தல் moḻumoḻu-, *v. intr.* To be flabby; கொழுகொழுப்பா யிருத்தல்.

மொள்(ளு)-தல் moḷ-, 2 *v. tr.* <கொள்-. To take in a vessel, as water; தண்ணீர் முதலியன முகத்தல். (அக. நி.) இன்ப மொண்டே யருந்தியிளைப்பாறினேன் (தாயு. பாயப்புலி. 27).

மொறமொறப்பு moṟamoṟappu, *n.* <மொரமொரெனல். *Loc.* 1. Cleanliness; சுத்தம். 2. Roughness; சருச்சரை. 3. Dryness; உலர்ச்சி.

மொறமொறெனல் moṟamoṟeṉal, *n.* See மொரமொரெனல்.

மொறுமொறு-த்தல் moṟumoṟu-, 11 *v. intr.* To grumble; வெறுப்புக்குறிப்புக் காட்டுதல். சார மொறுமொறுபபப் போகந் துய்த்தனன் (திருவானைக். கவுத். 102).

மொறுமொறெனல் moṟumoṟeṉal, *n.* See மொரமொரெனல். (W.)

மொஜா mojā, *n.* <Arab. *mauza.* Ryotwari village; குடிக்கிராமம். (C. G.)

மோ

மோ¹ mō. The compound of ம் and ஓ.

மோ² mō, *part.* A verbal suffix of second pers., as *keṉmō;* முன்னிலையசைச் சொற்களுள் ஒன்று. (தொல். சொல். 276.)

மோ³-த்தல் mō-, 12 *v. tr.* [K. *mūsu.*] To smell; மூக்கால் நுகர்தல். மோப்பக் குழையு மனிச்சம் (குறள், 90).

மோ[4]-த்தல் mō-, 12 v. tr. <முகு-. [K. moge.] 1. To take in a vessel, as water; மொள்ளுதல். (தைலவ. தைல.) 2. To undertake; மேற்கொள்ளுதல். மோந்த போராமுகதது (உபதேசகா. சிவவிரத. 327).

மோக்கட்டை mōkkaṭṭai, n. Corr. of மோவாய்க்கட்டை.

மோக்கம் mōkkam, n. <mōkṣa. 1. See மோட்சம். ஊனமின் மோக்க மென்கோ (திவ். திருவாய். 3, 4, 7). 2. Deliverance; release; விடுபடுகை. கபால நன்மோக்கத்து (திவ். திருவாய். 4, 10, 4).

மோக்களா mōkkaḷā, n. 1. Joviality, conviviality; சந்தோஷ ஆரவாரம். 2. Freedom from restraint; கட்டுப்பாடில்லாமை. Loc.

மோகநட்சத்திரம் mōka-naṭcattiram, n. <mōha+. (Astrol.) The 6th, 10th, 11th and 20th nakṣatras counted from that occupied by Saturn; சனி நிற்கும் நட்சத்திரத்தினின்று ஆறாவதும் பத்தாவதும் பதினோராவதும் இருபதாவதுமாகிய நட்சத்திரங்கள். (விதான. குணகுண. 41, உரை.)

மோகநூல் mōka-nūl, n. <மோகம்[1]+. 1. Book of false doctrines written to confound heretics and lead them astray; மதவிரோதிகளை வெளியாக்குவதற்காகப் பொய்க்கொள்கைகளை மேற்கொண்டு கூறும் நூல். 2. Treatise on erotics; காமநூல். முற்பருவப் பெண்கட்கு மோகநூல (பூவண. உலா, 447).

மோகப்படைக்கலம் mōka-p-paṭai k-kalam, n. <id.+. See மோகனாஸ்திரம். (யாழ். அக.)

மோகம்[1] mōkam, n. <mōha. 1. Loss of consciousness; fainting; மூர்ச்சை. (சூடா.) 2. Delusion of mind which prevents one from discerning the truth; உண்மையால் நிகழும் மயக்கவுணர்ச்சி. (சி. போ. பா. 2, 2). 3. Confusion, distraction; திகைப்பு. மோகமெங்கு முளவாக (கமபரா. நாகபாச. 84). 4. Fascination due to love; infatuation; காமமயக்கம். 5. Love, affection; ஆசை. 6. See மோகநட்சத்திரம். (விதான. குணகுண. 41, உரை.)

மோகம்[2] mōkam, n. <mōghā. Trumpet-flower. See பாதிரி[1]. (மலை.)

மோகம்[3] mōkam, n. See மோசம்[2]. (சங். அக.)

மோகம்[4] mōkam, n. Buttermilk; மோர். மோகமுறை யிணக்கம (அழகர்கல. 87).

மோகர்[1] mōkar, n. <mōha. 1. Infatuated persons; மோகமுடையவர். (சங். அக.) 2. Painters, as appealing to the aesthetic sense by their art; சித்திரக்காரர். (சூடா.)

மோகர்[2] mōkar, n. <Arab. mahr. Marriage portion; gift settled upon the bride on marriage; dower. See மகர், 2. Muharn.

மோகர்[3] mōkar, n. <Persn. mohar. See மோகரா.

மோகர்[4] mōkar, n. <Persn. muhar. Seal. See முகர்.

மோகரம்[1] mōkaram, n. <mukhara. 1. Roar; பேராரவாரம். பனறி பெருமோகாரத்தோடு (பாரத. அருச்சுனன்றவ. 95) 2. Vehemence; rage; உக்கிரம். (யாழ். அக.)

மோகரம்[2] mōkaram, n. 1. See மோகனம், 1. மோகரபாணம். (W.) 2. See மோகனம், 2. (சங். அக.)

மோகரா mōkarā, n. <Persn. mohar. Gold coin, varying in value from 10 to 15 rupees; பத்து அல்லது பதினைந்து ரூபாய் மதிப்புள்ள நாணயவகை.

மோகரி[1]-த்தல் mōkari-, 11 v. intr. <மோகரம்[1]. To roar; to shout with excitement; ஆரவாரித்தல். வீமனை மோகரித்த தவுணனைத் தடிந்து (பாரத. வேத்திர. 63).

மோகரி[2]-த்தல் mōkari-, 11 v. intr. <மோகரம்[2]. To be perplexed; மயங்குதல். (யாழ். அக.)

மோகலீலை mōka-līlai, n. <மோகம்[1]+. Lascivious behaviour; காமாதுரமான நடத்தை. (W.)

மோகவிலை mōka-vilai, n. <id.+. Fancy price; பிரியத்தின்மேற் கொடுக்கும் அதிகவிலை.

மோகவுவமை mōka-v-uvamai, n. <id.+. (Rhet.) Figure of speech in which the upamāṉam and the upamēyam are confounded; பொருண்மேலுள்ள வேட்கையால் உவமானோபமேயங்களை மயங்கக் கூறும் உவமையணிவகை. (தண்டி. 30, உரை.)

மோகன் mōkaṉ, n. <mōha. Kāma, the God of Love; மன்மதன். (பிங்.)

மோகனக்கல் mōkaṉa-k-kal, n. prob. முகனை+. 1. Stone platform in the artta-maṇṭapam, on which the necessary articles for worship are kept; பூசைச்சாமான்களை வைக்கும் அர்த்தமண்டபத்திலுள்ள கல்மேடை. 2. Carved stone-lintel projecting from a temple gate-way. See முகனைக்கல்.

மோகனச்சுண்ணம் mōkaṉa-c-cuṇṇam, n. <mōhana+cūrṇa. Magic powder used for fascinating a person; மயக்கப்பொடி. சிலைவேள் விட்ட மோகனச்சுண்ணம் (பாரத. சம்பவ. 94).

மோகனசாஸ்திரம் mōkaṉa-cāstiram, n. <id.+. See மோகநூல்.

மோகனநாட்டியம் mōkaṉa-nāṭṭiyam, *n.* <மோகனம் +. Dancing by women; மகளிர் கூத்து. (யாழ். அக.)

மோகனப்படை mōkaṉa-p-paṭai, *n.* <id. +. See மோகனாஸ்திரம். (சங். அக.)

மோகனம் mōkaṉam, *n.* <*mōhana*. 1. Bewildering; confusing; மயக்கமுண்டாக்குகை. 2. Confusion of mind, mental perturbation; giddiness; மனமயக்கம். மோகனமின் முளரி (சேது பு. வேதா. 11). 3. Magic art of fascinating a person, one of *aṣṭa-karumam*, q.v., also one of *aṟupattu-nālu-kalai*, q.v.; அஷ்டகருமத்துள் ஒன்றும் அறுபத்துநாலுகலையுள் ஒன்றுமான பிறரை மயங்கச்செய்யும் வித்தை. திடமுள மோகனமாட (தனிப்பா. i, 235, 1). 4. One of the five arrows of Kāma that makes a person infatuated; காமன் ஐங்கணைகளுள் மோகமுண்டாக்கும் அம்பு. (யாழ். அக.) 5. Infatuation as the effect of *mōkaṉam*, one of *pañca-pāṇa-c-ceyal*, q.v.; பஞ்சபாணச் செயல்களுள் ஒன்றான ஆசைமிகுகை. (பிங்.) 6 (Mus.) A specific melody-type; ஓர் இராகம். 7. Deceiving; cheating; ஏமாற்றுகை. (யாழ். அக.)

மோகனமாலை mōkaṉa-mālai, *n.* <id. +. A necklace of gold beads and corals; பொன்னும் பவளமுங் கோத்த மாலைவகை. மோகனமாலைக் கிசை வாய் மல்லிகைப பூமாலையிட்டே (கொண்டல்விடு. 501).

மோகனலாடு mōkaṉa-lāṭu, *n.* <id. +. A kind of sweetmeat; பண்ணிகாரவகை. *Mod.*

மோகனவித்தை mōkaṉa-vittai, *n.* <id. +. The magic art of fascinating a person. See மோகனம், 3. (W.)

மோகனாங்கனை mōkaṉāṅkaṉai, *n.* <id. + *anganā*. Fascinating woman; அழகு முதலிய வற்றுற் கண்டோரை மயக்கும் பெண். (W.)

மோகனாங்கினி mōkaṉāṅkiṉi, *n.* <id. +. See மோகனாங்கனை. (W.)

மோகனாஸ்திரம் mōkaṉāstiram, *n.* <id. +. A magic arrow that causes swooning; மயச்சுத்தையுண்டாக்கும் பாணவகை. (W.)

மோகனீயம் mōkaṉīyam, *n.* <*mōhanīya*. (Jaina.) The karma which bewilders all the faculties, one of *eṇ-kuṟṟam*, q.v.; எண்குற்றத் துள் ஆன்மாவுக்கு மயக்கத்தைச் செய்யுங் குற்றம். (பிங்.) (சிலப். 10, 177, உரை.)

மோகனை mōkaṉai, *n.* See மோகனம், 3. மோகனையெனபது முந்தி முயன்றுள் (கமபரா. அயோமுகி. 59).

மோகாதி mōkāti, *n.* <மோகம்[1] + ஆதி[1]. The three defects or infirmities, viz., *kāmam, vekuḷi, mayakkam*; காமம், வெகுளி, மயக்கம் என்ற முக் குற்றங்கள். (யாழ். அக.)

மோகாந்தகாரம் mōkāntakāram, *n.* <id. + *andha-kāra*. Confusion of mind; mental darkness, as caused by sexual passion; மோகமாகிய இருள்.

மோகான் mōkāṉ, *n.* White pomfret, deep neutral tint, *Stromateus sinensis*; வெண்ணிற முடைய கடல்மீன்வகை.

மோகி[1]-த்தல் mōki-, 11 *v. intr* <*mōha*. 1. To be confused, bewildered; மனந் திகைத்தல். (விநாயகபு. 74, 218.) 2. To be infatuated with love; காமத்தால் மயங்குதல்.

மோகி[2] mōki, *n.* prob. *mōhin*. 1. Bhang; கஞ்சா. (தைலவ. தைல.) 2. Opium; அபின். (நாம தீப. 393.)

மோகிக்கப்பண்ணு-தல் mōkikka-p-paṇṇu-, *v. tr.* <மோகி- + பண்ணு-. To infatuate; காமங்கொள்ளச் செய்தல். (W.)

மோகிதம் mōkitam, *n.* <*mōhita*. Infatuation of love; காமமயக்கம். மோகிதமான வெங்கணை (விநாயகபு. 82, 7).

மோகிதன் mōkitaṉ, *n.* <*mōhita*. Love-stricken man; காமவிச்சை கொள்வோன். (W.)

மோகிப்பி-த்தல் mōkippi-, 11 *v. tr.* Caus. of மோகி-. See மோகிக்கப்பண்ணு-. எல்லாச சகத் தைப் மோகிப்பிக்கு மன்னவன் (விநாயகபு. 74, 218).

மோகினி[1] mōkiṉi, *n.* <*mōhinī*. 1. See மோகனாங்கனை. அடைய மோகினிகளாயினர் கொல் (தக்கயாகப். 87). 2. Incarnation of Viṣṇu as a fascinating woman; திருமாலின் கண்டோரை மயங்கச்செய்யும் பெண்வடிவான அவதாரம். மோகி னியாகிய நின்வடிவினைக் கண்டு (பரிபா. 3, 33, உரை). 3. (Śaiva.) Impure Māyā. See அசுத்தமாயை. பிரியா மோகினிப பெரும போகத்தை (ஞானா. 1, 29). 4. A class of demoness; பெண்பேய்வகை. மோக மோகினிகள யோகயோகினிகள் (தக்கயாகப். 593).

மோகினி[2] mōkiṉi, *n.* <U. *muyin*. Compensation in money given annually by the Government to temples for resuming their lands; கோயில் நிலங்களைக் கைக்கொண்டதற்குப் பிரதியாக அரசாங்கத்தார் ஆண்டுதோறும் அக் கோயிற்குச் செலுத்தும் தொகை.

மோகினிப்பணம்[1] mōkiṉi-p-paṇam, *n.* <மோகினி[2] +. See மோகினி[2]. *Colloq.*

மோகினிப்பணம்[2] mōkiṉi-p-paṇam, *n.* மோகினி[1] +. Money offered to a god, when he

is dressed in female attire and taken out in procession; திருவிழாவில் தெய்வத்திற்குப் பெண் கோலஞ்செய்து எழுந்தருளுவிக்கும்போது கொடுக்கும் பணம். (W.)

மோகினிப்பிசாசு mōkiṉi-p-picācu, n. <id.+. See மோகினி¹, 4.

மோகூப் mōkūp, n. <Arab. mauqūf Suspension, dismissal; வேலையினின்றும் நீக்கி விடுகை. (C. G.)

மோகை mōkai, n. perh. முகை. Lump or mass, without any distinctive shape; உருத்தோன்றாத பிண்டம். Loc.

மோகொரம் mōkoram, n. <Arab. muharram. A Muhammadan festival. See மொகரம். (W.)

மோங்கில் mōṅkil, n. A kind of whale; திமிங்கில வகை. (தக்கயாகப. 384, உரை.)

மோசக்காரன் mōca-k-kāraṉ, n. <மோசம்¹ + காரன்¹. Deceiver; வஞ்சகன்.

மோசகம் mōcakam, n. <mōcaka. 1. See மோசம்², 2. (மூ. அ.) 2. Asceticism; துறவு. (யாழ். அக.)

மோசகன்¹ mōcakaṉ, n. <mōcaka. 1. Deliverer; விடுவிப்போன். 2. One who passes or lets out; வெளிவிடுவோன். நாதனை வனத்து மோசகனை மலைமகனை (சிவதரு. சுவர்க்கநரக. 175). 3. Ascetic; துறவி. (யாழ். அக.)

மோசகன்² mōcakaṉ, n. <mōṣaka. (சங். அக.) 1. Thief; திருடன். 2. Goldsmith; தட்டான்.

மோசகி mōcaki, n. Rattlewort. See கிலுகிலுப்பை, 2. (மூ. அ.)

மோசடி mōcaṭi, n. <மோசம்¹+. Fraud; ஏமாற்றம்.

மோசநாசம் mōca-nācam, n. <id.+. Cheating and damaging; ஏமாற்றுகையும் நஷ்டமுறுத்துகையும்.

மோசம்¹ mōcam, n. prob. mōṣa. 1. Treachery, deceit, fraud; வஞ்சனை. 2. Danger, risk, detriment, accident; அபாயம். 3. Mistake, error; பிசகு. (சங். அக.)

மோசம்² mōcam, n. <mōca. (மலை.) 1. Horse-radish tree. See முருங்கை. 2. Plantain; வாழை.

மோசம்போ-தல் mōcam-pō-, v. intr. <மோசம்¹+. 1. To be deceived; வஞ்சிக்கப்படுதல். 2. To fall into danger; அபாயத்துக்குள்ளாதல். 3. To go wrong; to be mistaken; பிசகுதல்.

மோசனம்¹ mōcaṉam, n. A kind of paddy; ஒருவகை நெல். (யாழ். அக.)

மோசனம்² mōcaṉam, n. <mōcana. Liberation, deliverance; விடுபடுகை. பாசமோசனந்தான் பண்ணுமபடி (சி. சி, 8, 3) (சூடா.)

மோசனம்³ mōcaṉam, n. Pulin. See முகசரம்.

மோசனி mōcaṉi, n. Red-flowered silk-cotton tree. See இலவு¹. (சங். அக.)

மோசாசம் mōcācam, n. <mōcā-ja. Resin gathered from the cotton-plant; பருத்திப் பிசின். (யாழ். அக.)

மோசாடம் mōcāṭam, n. <mōcāṭa. 1. Sandalwood; சந்தனம். (மலை.) 2. Plantain fruit; வாழைப்பழம் (யாழ். அக.)

மோசி¹-த்தல் mōci-, 11 v. intr. <muṣ. To err; to be misled; பிசகிப்போதல். (J.)

மோசி²-த்தல் mōci-, 11 v. tr. <muc. To give up; விட்டொழிதல். சயனை மோசியாயே (கைவல். சந். 21).

மோசி³ mōci, n. An ancient poet; பழைய புலவருள் ஒருவர். மோசி பாடிய வாயும் (புறநா. 158).

மோசிகை mōcikai, n. Tuft of hair on top of head; உச்சிமுடி. (யாழ். அக.)

மோசிமல்லிகை mōci-mallikai, n. perh. மோசி¹-+. Wild jasmine. See காட்டுமல்லிகை. (சிலப். 13, 156, உரை.)

மோசு mōcu, n. <Arab. mauj. Ardent desire; longing; மிக்க விருப்பம். அதன்மேல் எனக்கு மோசு.

மோசுப்பா mōcuppā, n. <Arab. muhāsaba. Responsibility, security; பொறுப்பு. (W.)

மோசூல் mōcūl, n. <Arab. mohassil. 1. Guard; காவற்காரன். (W.) 2. Guard placed over a revenue defaulter or a civil debtor; வரி செலுத்தாதவன் அல்லது கடன்காரன்மீதுவைக்கும் அரசாங்கக்காவல் (C. G.) 3. Compelling payment of a debt by sitting at the debtor's door; ஒருவன் வீட்டுவாயிலில் இருந்துகொண்டு வலிந்து கடன்தொகை தண்டுகை. Loc.

மோசை mōcai, n. <mōcā. 1. See மோசை யிலவம். (மூ. அ.) 2. Indian indigo. See அவுரி. (மூ. அ.) 3. Sweet flag; வசம்பு. (சங். அக.) 4. Plantain. See மோசம்², 2. (மூ. அ.) 5. Finger-ornament, probably of the shape of plantain-flower; விரலணிவகை. மகளிர் . . . மெல்விரல்

மோசை போல (நற். 188). முற்றிலை மோசைமுதற் கவகாளன் (காளத. உலா, 341).

மோசையிலவம் mōcai-y-ilavam, n. <மோசை+. Red-flowered silk-cotton tree. See இலவு[1]. (தைலவ. தைல.)

மோட்சகாலம் mōṭca-kālam, n. <mōkṣa +. (Astron.) The time of the last contact, emersion or egress of an eclipse; கிரகணமுடிவு வேளை. (W.)

மோட்சசத்துரு mōṭca-catturu, n. <id. +. Obstacles in the way of salvation, thirteen in number, viz., *rākam, tuvēṣam, kāmam, kurōtam, ulōpam, mōkam, matam, māṟcariyam, īriṣai, acūyai, iṭampam, taṟpam, akaṅkāram;* பேரின்பப்பேற்றுக்கு இடையூறுகளாகிய ராகம், துவேஷம், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், ஈரிஷை, அசூயை, இடம்பம், தற்பம், அகங்காரம் என்று பதின்மூன்று வகைப்பட்ட துணைங்கள். (W.)

மோட்சசாம்பிராச்சியம் mōṭca-cāmpirācciyam, n. <id. +. The Kingdom of Heaven; மோட்சமாகிய வீடு. (W.)

மோட்சதருமம் mōṭca-tarumam, n. <id. +. 1. Qualifications for attaining salvation; வீடடைதற்குரிய தகுதிப்பாடு. 2. A division of Cānti-parvam in the Mahābhārata; மகாபாரதத்து சாந்தி பர்வத்தின் ஒரு பகுதி.

மோட்சதீபம் mōṭca-tīpam, n. <id. +. 1. Lamp lighted in temple-towers in commemoration of dead persons; இறந்தவர் பொருட்டுக் கோயிற் கோபுரத்தில் ஏற்றும் விளக்கு. *Colloq.* 2. See மோட்சவிளக்கு, 1, 2. (W.)

மோட்சநாடி mōṭca-nāṭi, n. <id. +. See மோட்சகாலம். (W.)

மோட்சம் mōṭcam, n. <mōkṣa. 1. Liberation, release, escape; விடுபடுகை. 2. Final emancipation, release from transmigration, salvation; முத்திநிலை. 3. Heaven; பதமுத்தி. 4. (Jaina.) Complete deliverance, state of the soul in which it is freed from all bondage of karma, and has passed for ever beyond the possibility of rebirth, one of *nava-patārttam*, q.v.; நவ பதார்த்தங்களுள் வினைத்தொடர்பினின்றும் முற்றும் நீங்கு நிலை. (சீவக. 2814, உரை.)

மோட்சமண்டலம் mōṭca-maṇṭalam, n. <id. +. See மோட்சலோகம். *Chr.*

மோட்சமார்க்கம் mōṭca-mārkkam, n. <id. +. 1. A way to the Supreme Heaven. See அர்ச்சிராதிமார்க்கம். 2. Path leading to salvation; முத்திநெறி. (சிலப். 28, 175, உரை.)

மோட்சமித்துரு mōṭca-mitturu, n. <id. +. Piety and devotion, as aids to salvation; வீடுபேற்றுக்குச் சாதனமான பக்திசிரத்தை முதலியன. (W.)

மோட்சலோகம் mōṭca-lōkam, n. <id. +. Heaven; பரமபதம். *Chr.*

மோட்சவாசி mōṭca-vāci, n. <id. +. Beatified soul; மோட்சபதவியிலுள்ளோன். *Chr.*

மோட்சவாதி mōṭcavāti, n. <மோட்சவாசி. One who has attained bliss; வீடுபேறடைந்தவன். (யாழ். அக.)

மோட்சவான் mōṭcavāṉ, n. <mōkṣa. See மோட்சவாதி. (யாழ். அக.)

மோட்சவிளக்கு mōṭca-viḷakku, n. <id. +. (W.) 1. Lamp lighted and carried before the corpse or placed at the burial place, among Lingayats; வீரசைவரது பிரேதத்தின் முன்பு கொண்டுபோகப்படுவதும், மயானத்தில் புதை குழியில் வைக்கப்படுவதுமான தீபம். 2. Lamp lighted for the dead, among Roman Catholics; உரோமன் கதோலிக் கிறிஸ்தவருள் இறந்தவர் பொருட்டு ஏற்றப்படும் விளக்கு. 3. See மோட்சதீபம், 1.

மோட்சானந்தம் mōṭcāṉantam, n. <id. +. Heavenly felicity; வீட்டின்பம். (W.)

மோட்டன் mōṭṭaṉ, n. prob. மோடு[2]. Ruffian; முரக்கன். சிறையை மோட்டன் வளைதலொரு தோமிசை யேகொடு (திருப்பு. 266).

மோட்டா mōṭṭā, adj. <Hind. mōṭa. 1. Large, great, big; பெரிய. 2. Shoddy, trashy; கீழ்த்தரமான. 3. Coarse, rough, unrefined; முருடான. மோட்டாத்துணி.

மோட்டாக்குறுவை mōṭṭā-k-kuṟuvai, n. <மோட்டா+. A coarse paddy which matures in 3 months; மூன்று மாதத்தில் விளையக் கூடிய குறுவைநெல்வகை. *Loc.*

மோட்டார் mōṭṭār, n. <E. motor. Automobile, motor car; யந்திரவுதவியால் தானே ஓடும் வண்டிவகை. *Mod.*

மோட்டிறால் mōṭṭiṟāl, n. <மோடு[1]+. Mantis-shrimp, *Astacus squilla;* இறால்மீன்வகை. (W.)

மோட்டுத்தனம் mōṭṭu-t-taṉam, n. prob. மோடு[2]+. Obstinacy; முருட்டுத்தனம். (சங். அக.)

மோட்டுமீன் mōṭṭu-mīṉ, n. <மோடு[1]+. Star; நட்சத்திரம். மோட்டுமீன் குழாத்தின் (சீவக. 2325).

மோட்டுவடிம்பு mōṭṭu-vaṭimpu, n. <id. +. Ridge-piece. See மோட்டுவளை. (C. G.)

மோட்டுவரி mōṭṭu-vari, n. <id.+. House-tax; வீட்டுவரி. (J.)

மோட்டுவலயம் mōṭṭu-valayam, n. <id. +. A kind of garland, மாலைவகை. குட்டுக் கதநிகையும் மோட்டுவலயமும் பிறவுமாகப் புனைந்து (இறை. 2, பக். 42).

மோட்டுவளை mōṭṭu-vaḷai, n. <id.+. Ridge-piece; வீட்டுக் கூரையின் உச்சிச்சேர்க்கைக்கு ஆதாரமாகவைக்கும் மரத்துண்டு. *Loc.*

மோட்டுவளையோடு mōṭṭuvaḷai-y-ōṭu, n. <மோட்டுவளை+. See மோட்டோடு. *Mod.*

மோட்டை mōṭṭai, n. perh. ஓட்டை. cf. மோழை. [K. *mōle.*] Porosity of the ridge of a field; நீர் கசிந்து வெளியேறும்படி வயல்வரப்புத் துவாரப்பட்டிருக்கை. மோட்டை போனால் கோட்டை போகும். *Tinn.*

மோட்டோடு mōṭṭōṭu, n. <மோடு¹+. Ridge tile; வீட்டு முகட்டிலிடும் வளைவோடு. *Colloq.*

மோட்டோலை mōṭṭōlai, n. <id.+. Palm-leaf used to cover the ridge of a roof; கூரைமோடு வேயும் ஓலை. *Nāñ.*

மோடசகன் mōṭacakaṉ, n. prob. *mōṣaka.* Thief; கள்வன். (யாழ். அக.)

மோடம்¹ mōṭam, n. <மூடம்¹. [T. *mōḍamu*, K. *mōḍa.*] Clouded sky. See மூடம்¹, 1.

மோடம்² mōṭam, n. <மூடம்². Stupidity; மூடத்தனம். (W.)

மோடமரம் mōṭa-maram, n. perh. மகிழம் +. Pointed leaved ape-flower. See மகிழ்³. *Loc.*

மோடன்¹ mōṭaṉ, n. <மோடு¹. Tall man; வளர்ந்தவன். நெடுந்தாளினுன் மோடன் (சைவச. ஆசா. 13).

மோடன்² mōṭaṉ, n. <*mūḍha.* Fool, blockhead; மூடன். மோடாதி மோடனை (திருப்பு. 557).

மோடனம் mōṭaṉam, n. <*mōṭana.* 1. Wind; காற்று. (யாழ். அக.) 2. Rubbing, grinding; அரைக்கை. (யாழ். அக.) 3. Disgrace; அவமானம். கனுழினை மோடனம் விளைத்தமைபோல் (குற்று. தல. திருமண. 66). 4. Magic, enchantment, as a craft; மாயவித்தை. (W.) 5. Folly, stupidity; மூடத்தனம். (W.)

மோடாமோடி mōṭā-mōṭi, n. <மோடி²+. [K. *mōḍāmōḍi.*] Ostentation, pomp; ஆடம்பரம். மோடாமோடியாய்ச் செலவு செய்கிறது. (W.)

மோடி¹ mōṭi, n. prob மோடு¹. Durgā; காடுகாள். (பிங்.) பேய் எனது . . . மோடி கழல் சூடிபேய் (தக்கயாகப். 241).

மோடி² mōṭi, n. [T. K. *mōḍi.*] 1. Arrogance; செருக்கு. (W.) 2. Way, manner, style, air; விதம். அப்போதுமொரு மோடியுமாய் வேறே முகமுமாய (பணவிடு. 195) 3. Grandeur, display; ஆடம்பரம். கலியாணம் வெகு மோடி. 4. Military bearing, as of a soldier; dignified bearing; சம்பிரமம். (W.) 5. Exhibition, show; வேடிக்கைக்காட்சி. (W.) 6. A trial of magical power. See மகிடி³, 1. 7. Disagreement; discord; பிணக்கு. ஊடலாயப் போவாரை மோடி திருத்துவார் (விறலிவிடு. 315). 8. Deceit, fraud; வஞ்சகம். 9. Wholesale, entirety; மொத்தம். அவற்றை மோடியாய் வாங்கினேன். (W.)

மோடி³ mōṭi, n. [K. *mōḍi.*] 1. Dried knots of the creeper of long pepper; கண்டதிப்பலி. 2. Long-pepper root; திப்பலிமூலம். (பைஷஜ. 85.)

மோடி⁴ mōṭi, n. <Mhr. *mōḍi.* See மோடியெழுத்து. *Loc.*

மோடி⁵ mōṭi, n. [T. *maguḍi.*] Snake charmer's pipe. See மகிடி².

மோடிக்காரன் mōṭi-k-kāraṉ, n. <மோடி²+. 1. Stylish man; அலங்காரப்பிரியன். *Loc.* 2. Unfriendly man; man with forbidding countenance; பிணக்கங்காட்டுவோன். (W.) 3. Deceitful person; வஞ்சகன். *Loc.*

மோடிடு-தல் mōṭiṭu-, v. intr. <மோடு¹ +. 1. To become pregnant by illicit intercourse; சோரத்திற் கருப்பமாதல். *Loc.* 2. To form shoals, as in rivers; ஆறு முதலியவற்றில் மணலால் மேடு உண்டாதல்.

மோடிநாணயம் mōṭi-nāṇayam, n. <மோடி²+. A gold coin introduced by the Maharattas; பொன்னுணயவகை. மோடிநாணய விலையாலே (திருப்பு. 572).

மோடிப்புடவை mōṭi-p-puṭavai, n. <id. +. A kind of white-coloured saree; வெண்ணிறமுள்ள சீலைவகை. (W.)

மோடிமோதிரம் mōṭi-mōtiram, n. <id. +. Finger-ring made of pinchbeck; சொத்தை மோதிரம். *Loc.*

மோடியெடு-த்தல் mōṭi-y-eṭu-, v. intr. <மோடி²+. 1. To discover and remove the articles of witchcraft buried in the ground belonging to a person with a view to cause him harm; ஒருவனுக்குக் கேடுவிளைப்பதற்காக அவன் நிலத்திற் புதைத்துவைக்கப்பட்ட சூனியப்பொருளை

எடுத்துவிடுதல். 2. To search for hidden treasure by means of magic; மந்திரவித்தையால் புதையலிடத்தைக் கண்டறிதல்.

மோடியெழுத்து mōṭi-y-eḻuttu, *n.* <மோடி⁴+. 1. A Maharatta script; மராட்டிய லிபிவகை. 2. A running hand; இராயசவெழுத்து.

மோடிவித்தை mōṭi-vittai, *n.* <மோடி²+. A trial of magical power. See மகிடி³, 1.

மோடிவை-த்தல் mōṭi-vai-, *v. intr.* <id. +. To bury articles of witchcraft under the ground belonging to a person with a view to cause him harm; ஒருவனுக்குக் கேடு விளைப்பதற்காக அவன் நிலத்திற் சூனியப்பொருளை புதைத்துவைத்தல்.

மோடு¹ mōṭu, *n.* cf. முகடு. [T. *mōdu.*] 1. Height; உயர்ச்சி. (பிங்.) மோடிசை வெற்பென (அஷ்டப. திருவேங்கடத்தந். 44). 2. Hill, eminence; மேடு. (சூடா.) 3. Top, as of a house; முகடு. 4. Ridge of roof; கூரையின் உச்சி. 5. Largeness; stoutness, பருமை. மோட்டிரு (சீவக. 95). மோட்டெருமை (தமிழ்நா. 77). 6. Greatness; பெருமை. மோட்டெழி லிளமை நீங்க (சீவக. 2799). 7. High position, உயர்நிலை. மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள் (நாலடி, 358). 8. Belly, stomach; வயிறு. (பிங்.) பிணாமோட்டு . . . பேய்மகள் (திருமுரு. 50). 9. Womb; கருப்பை. 10. Body; உடம்பு மோட்டுடைப் போரவையோடு (ஆசாரக். 92). 11. Cleavage, cleft; பிளப்பு. (அக. நி.)

மோடு² mōṭu, *n.* prob. *mūḍha.* [T. *mōtu.*] Stupidity, dullness of intellect; ignorance; மடமை. புலவர்கவிதை கேட்டவர்க்கு வரிசைநல்காத மோட்டெலுத்தா (கடம்ப. பு. இலீலா. 127).

மோடுகூடு-தல் mōṭu-kūṭu-, *v. intr.* <மோடு¹+. To be bony in the chest; மார்பெலும்பு முதலியன தெரிதல். இந்தக் குழந்தைக்கு மாரபு மோடுகூடியிருக்கிறது.

மோடுபரு-த்தல் mōṭu-paru-, *v. intr.* <id.+. To be strong and sinewy in the nape of the neck; பிடரியிற் சதை திரண்டிருத்தல். ஊன் மல்கி மோடுபருப்பார் (திவ். திருவாய். 3, 5, 7).

மோடுபிரி-தல் mōṭu-piri-, *v. intr.* <id.+. To become pregnant; கருப்பமாதல். *Loc.*

மோணம் mōṇam, *n.* <*mōṇa.* (யாழ். அக.) 1. Dried fruit; பழத்தின் வற்றல். 2. Box for carrying snakes; பாம்புப்பெட்டி.

மோத்தை¹ mōttai, *n.* [K. *mōtu.*] 1. Ram; ஆட்டுக்கிடாய். மோத்தையுந் தகரு முதளும் (தொல். பொ. 602). 2. Goat; வெள்ளாட்டுக் கிடாய். (சூடா.) 3. Aries. See மேடராசி. (சூடா. உள். 9.)

மோத்தை² mōttai, *n.* [K. *mōte.*] 1. Spathe or unblown flower, as of plantain, fragrant screw-pine, etc.; வாழை தாழை முதலியவற்றின் மடல் விரியாத பூ. நெடேலை வக்காமுதலாயின . . . தாழம்பூமோத்தை போலிருப்பன (நற். 211, உரை). 2. Half-ripe coconut; முற்றுத்தேங்காய். *Coim.*

மோதகக்கெண்டை mōtaka-k-keṇṭai, *n.* perh. மோதகம்+. Large-eyed carp, bluish green, *Megalops cyprinoides;* நீலமும் பசுமையுங் கலந்த கெண்டைமீன்வகை.

மோதகக்கொண்டை mōtaka-k-koṇṭai, *n.* perh. id.+. A kind of rounded braid of hair on the top of head; உருண்டையாகக் கட்டும் உச்சிக்கொண்டை.

மோதகப்பிரியன் mōtaka-p-piriyaṉ, *n.* <*mōdaka-priya.* Gaṇēśa; விநாயகன். (யாழ். அக.)

மோதகம் mōtakam, *n.* <*mōdaka.* 1. Cake of rice-flour made into a ball and boiled or steamed; அப்பவருக்கம். வகையமை மோதகம (மதுரைக். 626). 2. A bolus-like preparation of rice-flour. See கொழுக்கட்டை. (கந்தபு. காவிரி. 25.) 3. A kind of pudding, made of flour; பிட்டு. காழியா மோதகத் தூமுறு விளக்கமும் (சிலப். 6, 137). 4. A kind of flour-cake; தோசை. (W.) 5. Delight, mirth; மகிழ்ச்சி. (W.) 6. Agreement, suitability; இணக்கம். (யாழ். அக.)

மோதகமரம் mōtaka-maram, *n.* perh. id. +. Fetid tree. See பீநாறி, 1. (யாழ். அக.)

மோதபர் mōtapar, *adj.* <Arab. *mutabar.* Reliable, respectable, trustworthy; நம்பிக்கையான. (C. G.)

மோதபர்குடி mōtapar-kuṭi, *n.* <மோதபர் +. Respectable tenant of substantial means; நம்பிக்கையான குடித்தனக்காரன். (C. G.)

மோதம் mōtam, *n.* <*mōda.* 1. Joy, rejoicing, gladness; மகிழ்ச்சி. முன்புற்றது கணடெழு மோதமுறு (வேதாரணி. பிரமோப. 16). 2. Intoxication; களிப்பு. 3. Smell, scent, perfume; வாசனை. 4. cf. *aja-mōdā.* Bishop's weed. See ஓமம்¹. (மலை.)

மோதயந்தி mōtayanti, *n.* <*mōdayantī.* Wild jasmine. See காட்டுமல்லிகை. (மூ. அ.)

மோதரம் mōtaram, *n.* See மோதிரம். தாமோதரக்கையா லாரக்க (திவ். பெரியதி. 10, 5, 3).

மோதரிபா mōtaripā, *n.* <U. *mutarifa.* Professional tax formerly levied on the manufacturing and trading communities; தொழில்வரி. (W.)

மோதலை[1] mōtalai, n. <முகதலை[1]. 1. Front piece or part of a cloth; முகதலை. மோதலை முனைப் பாகமைப் புறமாதலால் கெட்டியாய் செய்யப்பட்டிருக்கும். Nāñ. 2. Battle-front; போர்முனை. Loc.

மோதலை[2] mōtalai, n. <முகதலை[2]. Temporary loan; கைம்மாற்றுக் கடன். Loc.

மோதவம் mōtavam, n. <mōda. Perfume, scent, smell; வாசனை. (சூடா.)

மோதிரக்கள்ளி mōtira-k-kaḷḷi, n. perh. மோதிரம்+. A creeper; கொடிவகை. (மூ. அ.)

மோதிரக்கன்னி mōtira-k-kaṉṉi, n. perh. id.+. [K. mōdirakanni, M. mōdirakkanni.] Climbing flax, l. sh., Hugonia mystax; நீண்ட செடிவகை. (W.)

மோதிரப்பாட்டு mōtira-p-pāṭṭu, n. <id. +. A dramatic poem; ஒரு நாடகநூல்வகை. நாடகச் செய்யுளாகிய மோதிரப்பாட்டுமே . . . கடகண்டுமே (தொல். பொ. 492, உரை).

மோதிரம் mōtiram, n. prob. mudrā. [K. mōdira, M. mōdiram.] Finger-ring; கணையாழி. சுறுவேறெழுதிய மோதிரந் தொட்டாள் (கலித். 84, 23).

மோதிரமாறுதல் mōtira-māṟutal, n. <மோதிரம்+. Exchange of rings between bride and bridegroom at their marriage; கிறிஸ்துவருள் விவாகத்தில் மணமகனும் மணமகளும் கணையாழியை மாற்றிக்கொள்ளுகை. Chr.

மோதிரவிரல் mōtira-viral, n. <id.+. Ring-finger, fourth finger; சுண்டுவிரலுக்கடுத்த விரல். (நாமதீப. 584.)

மோதிரவிளையாட்டு mōtira-viḷaiyāṭṭu, n. <id.+. 1. An item in the marriage festivities in which the bride and bridegroom pick out a ring dropped into a pot of water; விவாகத்தில் குடத்துநீரில் மோதிரமிட்டு மணமக்கள் எடுத்து ஆடும் விளையாட்டு. (W.) 2. A children's game of hiding a ring and finding it; மோதிரத்தை ஒளித்து எடுக்கும் பிள்ளைவிளையாட்டுவகை. Loc.

மோதினி mōtiṉi, n. <mōdinī. (மூ. அ.) 1. Musk; கஸ்தூரி. 2. Jasmine; மல்லிகை.

மோது[1]-தல் mōtu-, 5 v. tr. [T. K. mōdu, M. mōduga.] 1. To hit, strike, smite, butt; புடைத்தல். (பிங்.) கனகநிற வேதனபயமிட மோதுகரகமல (திருப்பு. 543). 2. To blow against, dash against, push against with force; தாக்குதல். மோதி முதுதிரையால் மொத்துண்டு (சிலப். 7, கட்டுரை, 7). 3. To plaster, put on, as earth to a mud wall; அப்புதல். சுவர்க்கு மண் மோதுகிறது. (W.)

மோது[2] mōtu, n. <மோது-. [K. mōdu.] Blow, stroke; தாக்கு. அவனை ஒருமோது மோதினான்.

மோது[3] mōtu, n. [T. mōda.] Loc. 1. Bundle of straw; வைக்கோற் கட்டு. மோதுகட்டியிழுத்தாய்விட்டது; சுவாமி புறப்படலாம். Loc. 2. Water added to crushed castor-beans and heated, in extracting oil; எண்ணெய் வடிக்கும் பொருட்டுச் சேர்த்துக் காய்ச்சும் நீர்.

மோதை mōtai, n. Sweet flag; வசம்பு. (சங். அக.)

மோந்தை mōntai, n. cf. மொந்தை. [M. mōnda.] A kind of drum; தோற்கருவிவகை. மோந்தை முழாக்குழ லேனமொடு வீணை (தேவா. 349, 5).

மோப்பம் mōppam, n. <மோ[3]-. 1. Scent, smell; வாசனை. 2. Nose; மூக்கு. (யாழ். அக.)

மோப்பம்பிடி-த்தல் mōppam-piṭi-, v. tr. <மோப்பம்+. 1. To scent; to discern by smell, as hounds on a track; வாசனையால் ஒன்றை யறிதல். 2. To follow a woman with improper desire; காமவிச்சையுடன் ஒருத்தியைத் தொடர்தல்.

மோப்பி[1] mōppi, n. <மோ[3]-. See மோப்பம். (யாழ். அக.)

மோப்பி[2] mōppi, n. [T. mōpi, K. mōpu.] Widow, used disrespectfully; கைம்பெண். Loc.

மோப்பு mōppu, n. prob. மோ[3]-. Desire, amour; காதல். முஷ்டிவாங்கிய பயலோ மோப்பாச்சு (விறலிவிடு. 772).

மோம்பழம் mōm-paḻam, n. <id.+. Delicious, fragrant fruit; நன்மணமுள்ள கனி. மோம்பழம் பெற்றுறுபோலே (ஈடு, 3, 5, 3).

மோய் mōy, n. cf. Hind. māī. Mother; தாய். (பிங்.) உன்மோயின் வருத்தமும் (திவ். பெருமாள். 9, 9).

மோயன் mōyaṉ, n. <U. muyīn. 1. Establishment; சிப்பந்தியாட்கள். (W.) 2. Members of a temple establishment; கோயிற் படித்தரக்காரர். Loc.

மோயின் mōyiṉ, n. See மோயன். (W.)

மோயினி mōyiṉi, n. See மோகினி[2].

மோர்[1] mōr, n. cf. mōraṇa. [T. mōru, K. mōsaru, M. mōr.] Buttermilk; curd diluted with water; நீர்விட்டுக் கடைந்த தயிர். நாண்மோர் மாறும் . . . ஆய்மகள் (பெரும்பாண். 160).

மோர்[2] mōr, n. See முகர். (R.)

மோர்க்களி mōr-k-kaḷi, n. <மோர்[1]+. A kind of repast made of buttermilk and rice-flour; மோரோடு அரிசிமாச்சேர்த்துச் செய்த களி யுணவு. Loc.

மோர்க்கறி mōr-k-kaṟi, n. <id.+. See மோர்க்குழம்பு. Loc.

மோர்க்குழம்பு mōr-k-kuḻampu, n. <id. +. A kind of sauce made in buttermilk; மோர் சேர்த்துச் செய்யுங் குழம்புவகை. (இந்துபாக. 11.)

மோர்க்கூழ் mōr-k-kūḻ, n. <id.+. See மோர்க்களி. Loc.

மோர்ச்சாற்றமுது mōr-c-cāṟṟamutu, n. <மோர்[1]+. See மோர்ச்சாறு. Vaiṣṇ.

மோர்ச்சாறு mōr-c-cāṟu, n. <id.+. A kind of sauce prepared with buttermilk; மோர் சேர்த்துச்செய்த சாறு.

மோர்சங்கு mōrcaṅku, n. See மோர்சிங்கு.

மோர்சிங்கு mōrciṅku, n. perh. mukha+ śaṅkha. [K. mōi chang.] Jew's-harp; வாயிற் பிடித்துக்கொண்டு கையால் தட்டி வாசிக்கும் வாத்திய வகை. Loc.

மோர்மிளகாய் mōr-miḷakāy, n. <மோர்[1] +. Chillies cured with buttermilk; மோரி லிட்டுப் பக்குவப்படுத்திய மிளகாய்.

மோர்மிளகு mōr-miḷaku, n. <id.+. See மோர்மிளகாய்.

மோரடகம் mōraṭakam, n. <mōraṭaka. See மோரடம்[1].

மோரடம்[1] mōraṭam, n. <mōraṭa. 1. Root of sugarcane; கரும்புவேர். (மூ. அ.) 2. A straggling shrub with simple oblong leaves and greenish flowers; வீழ்ப்பூடு. (தைலவ. தைல.)

மோரடம்[2] mōraṭam, n. <mōraṭā. Bow-string hemp. See பெருங்குரும்பை. (மலை.)

மோரம் mōram, n. An ancient tax; பழைய வரிவகை. மோரமும் இலைவாணியப பாட்டமும் திகைகட்காசும (T. A. S. i. 165).

மோரா[1] mōrā, n. <Persn. mohar. A gold coin, mohur; மோகராநாணயம். (சங். அக.)

மோரா[2] mōrā, n. <Pāli mōrō <mayūra. [K. mōra.] Peacock's feather; மயிற்பீலி.

மோரா[3] mōrā, n. Foot-stool; பாதபீடம். (W.)

மோரா[4] mōrā, n. <E. Marrow; எலும்பின் உள்ளீடு.

மோரி mōri, n. <U. mūrī. Small water-course; channel; gutter; சிறுவடிகால். தன் வய லுக்கு மோரி ஒன்று வெட்டினான். Loc.

மோரியர் mōriyar, n. <Maurya. 1. The Mauryas; மௌரிய வமிசத்தவர். மோரியர தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு (அகநா. 281). 2. Vittiyātarar, a class of semi-divine beings; வித்தியாதரர். (புறநா. 175, உரை.) 3. Nāgas; நாகர். (புறநா. 175, உரை.)

மோரீசு mōrīcu, n. Mauritius, an island in the Indian Ocean; இந்து மகாசமுத்திரத்துள்ள ஒரு தீவு. (W.)

மோரீசுவாழை mōrīcu-vāḻai, n. <மோரீசு +. A kind of plantain. See ஆனைவாழை.

மோரெண்ணெய் mōr-eṇṇey, n. <மோர்[1] +. A medicinal oil prepared with buttermilk; மோர் சேர்த்துச்செய்யும் மருந்தெண்ணெய். Nāñ.

மோரை mōrai, n cf. மோறை[2]. [K. mōṟe.] Colloq. 1. Face; முகம். 2. Chin; முகவாய்க் கட்டை.

மோரைக்கயிறு mōrai-k-kayiṟu, n. <மோரை+. Rope tied round the mouth of bulls; மாட்டின்வாயைச் சுற்றிக் கட்டுங் கயிறு. Nāñ.

மோரோடம் mōrōṭam, n. cf. மரோடம். Red catechu. See செங்கருங்காலி. பாதிரி . . . மாமலர நறுமோரோடமொடு (நற். 337).

மோலி mōli, n. <mauli. Crown. See மௌலி. இளையவற் கவித்த மோலி யென்னையுங் கவித்தி யென்றான் (கம்பரா. வீபீடண. 145).

மோவம் mōvam, n. <mōha. (Jaina.) See மோகனீயம். மோவழை மோவத்தினுக்கும் (மேரு மந். 103).

மோவாய் mōvāy, n. prob. முகம்+வாய். [T. mōvi.] 1. Chin; வாய்க்குக்கீழுள்ள இடம். குச்சி னிரைத்த குரூஉமயிர மோவாய் (புறநா. 257). 2. Beard; தாடி. (W.)

மோவாய்க்கட்டை mōvāy-k-kaṭṭai, n. <மோவாய+. See மோவாய், 1. Colloq.

மோவாய்க்கட்டைபிடி-த்தல் mōvāy-k-kaṭṭai-piṭi-, v. tr. <id.+. See மோவாய்தாங்கு-. Colloq.

மோவாய்தாங்கு-தல் mōvāy-tāṅku-, v. tr. <id.+. To beg, make entreaties, as by touching another's chin, கெஞ்சுதல்.

மோவாய்பிடி-த்தல் mōvāy-piṭi-, v. tr. <id.+. See மோவாய்தாங்கு-.

மோழல் mōḻal, n. Swine; பன்றி. (பிங.)

மோழலம்பன்றி mōḻal-am-paṉṟi, n. <மோழல்+. Boar; ஆண்பன்றி. மோழலம் பன்றி யோடு முளவுமா (சீவக. 1233).

மோழனை mōḻaṉai, n. cf. mōdinī. Wild jasmine. See காட்டுமல்லிகை. (சங். அக.)

மோழி mōḻi, n. prob. மோழை. cf. Malay. malāyu. See மோழிக்குழம்பு.

மோழிக்குழம்பு mōḻi-k-kuḻampu, n. <மோழி+. A mild sauce in imitation of a Malay curry; புளிக்கோசுபோன்ற குழம்புவகை.

மோழை mōḻai, n. cf. மூளி. 1. [M. mōḻa.] Hornless or dehorned cattle; கொம்பில்லாத விலங்கு. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும். 2. Anything defective; மொட்டை. (யாழ். அக.) 3. Stump, block; மரத்தின் அடிமுண்டம். (W.) 4. Stupidity; மடமை. மோழை மோவாதிருவகரும (மேருமந். 103). 5. [K. mōḷe.] Cleft; crevice, வெடிப்பு. (யாழ். அக.) 6. [K. mōḷe.] Subterranean water-course; கீழாறு. மண்டலங் கிழிந்த வாயின் மறிகடன் மோழைமண்ட (கம்பரா. பொழி லிறு. 60). 7. Bubble; குமிழி. அண்ட மோழையெழ (திவ். திருவாய். 7, 4, 1) 8. Pool; மடு. ஆழியா னென்னு மாழ மோழையிற் பாய்ச்சி (திவ். பெரியாழ். 3, 7, 4). 9. Gruel; கஞ்சி. (பிங்.)

மோழைக்கறுப்பு mōḻai-k-kaṟuppu, n. prob. மோழை+. A kind of paddy; நெல்வகை. Loc.

மோழைக்கொம்பன் mōḻaikkompaṉ, n. <மோழைக்கொம்பு. Ox with horns hindered in their growth; dehorned cattle; வளர்ச்சியுறும் படி சுடப்பெற்ற கொம்புள்ள மாடு.

மோழைக்கொம்பு mōḻai-k-kompu, n. <மோழை+. Horn hindered from growing by being burnt; வளர்ச்சியுறும்படி சுடப்பட்ட கொம்பு. (W.)

மோழைபுறப்படு-தல் mōḻai-puṟappaṭu-, v. intr. <id.+. To gush out, as water from a subterranean stream; கீழாறு வெளியே தோன்றிப் பாய்தல். (W.)

மோழைமுகம் mōḻai-mukam, n. prob. id.+. cf. மோழல். Swine; பன்றி. (நிகண்டு.)

மோழைமை mōḻaimai, n. <id. 1. Stupidity; மடமை. முன்புசொன்ன மோழைமை யால் முட்டை மனத்தீரே (தேவா. 188, 8). 2 Word of ridicule; பரிகாச வார்த்தை. முன் பொலாஞ்சில மோழைமை பேசவா (தேவா. 359, 4).

மோழைவழி mōḻai-vaḻi, n. <id.+. Narrow gate or opening; நுழைவழி. (திருக் காளத். பு. அரும்.)

மோறா[1]-த்தல் mōṟā-, 12 v. intr. [T. mōratillu, K. mōrate.] 1. To gape; அங்காத்தல். நரசிம்மத்தினுடைய மோறாந்த முகத்தையும் (ஈடு, 4, 8, 7). 2. To be lazy; சோம்பியிருத்தல். மோறாந் தோரொருகானினையா திருந்தாலும் (தேவா. 1051, 3).

மோறா[2] mōṟā, n. See மோரா[1]. (W.)

மோறா[3] mōṟā, n. See மோரா[3]. (W.)

மோறை[1] mōṟai, n. Wildness, savageness; முரட்டுத்தனம். மோறை வேடுவர் கூடிவாழ் (தேவா. 919, 4).

மோறை[2] mōṟai, n. [T. mōra, Tu. mōre.] 1. Chin, used in contempt; மோவாய். நான் உன மோறையைப் பெயர்ப்பேன். 2. See மோறைக் கட்டை.

மோறைக்கட்டை mōṟai-k-kaṭṭai, n. <மோறை[2]+. Face, used in contempt; முகம். Colloq.

மோனம் mōṉam, n. <Pāli. mōna <mauna. See மௌனம். கேள்வியின மோனமும் பாழ்பட (கம்பரா. கிருமபாலை. 59).

மோனமுத்திரை mōṉa-muttirai, n. <மோனம்+. Hand-pose assumed in an attitude of silence in religious contemplation; மௌனநிலையைக் காட்டும் முத்திரைவகை. இறைவன் மோனமுத்திரையத்தனும் (திருமுரு. 112, உரை).

மோனர் mōṉar, n. <id. Ascetics who have taken the vow of silence; மௌனவிரத முள்ள துறவிகள். (W.)

மோனவரால் mōṉa-varāl, n. prob. id.+. Sand eel, brownish or greenish, attaining 15 in. in length, Rhynchobdella aculeata; கபிலம் அல் லது பச்சைநிறமுள்ளதும் 15 அங்குல நீளம் வளர் வதுமான சேற்றுவரால் மீன்.

மோனி mōṉi, n. <mauninn. Person who has taken a vow of silence. See மௌனி. மோனிகளாய் முனிச்செல்வர் (தேவா. 982, 10).

மோனிகம் mōṉikam, n. perh. maunika. Bandicoot; பெருச்சாளி. (சங். அக.)

மோனை[1] mōṉai, n. perh. முனை. 1. See மோனைத்தொடை. (தொல். பொ. 404.) 2. First; முதன்மை. மோனை மங்கலத் திபற்றுவ (உபதேசகா. சிவபுண். 63). மோனையா மௌவுரைத்த சவுணத்திற்கு (வேதா. சூ. 131).

மோனை[2] mōṉai, n. cf. மகன். [T. mōnaru, Tu. mōnu.] Sonny, used as a term of endearment in addressing a child; மகன். (J.)

மோனைத்தொடை mōṉai-t-toṭai, n. <மோனை¹+. (Pros.) A versification in which the first letters of all or some feet of a line alliterate, one of five toṭai, q.v.; செய்யுட்டொடை ஐந்தனுள் சீர்களின் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது. (இலக். வி. 723, உரை.)

மோஜா mōjā, n. <Persn. mōza. 1. Stocking; மேஜோடு. 2. Shoes; ஜோடு. (W.)

மோஜு mōju, n. See மௌசு, 1. (C. G.)

மோஸ்தர் mōstar, n. <U. mōstar. <Arab mauzūn. 1. Manner; விதம். 2. Sample, specimen; model; மாதிரிப்பொருள். 3. Fashion, in dress and manners; நடையுடைமாதிரி.

மௌ

மௌ mau. The compound of ம and ஔ.

மௌகூப் maukūp, n. <U. mauqūf. That which is suspended, stopped or closed; நிறுத்தப்பட்டது. (C. G.)

மௌகூர்த்திகன் maukūrttikaṉ, n. <mauhūrtika. Astrologer; முகூர்த்தம் நியமிக்கும் சோதிடன். (சிலப். பக். 534, கீழ்க்குறிப்பு.)

மௌசலம் maucalam, n. <mausala. Fight with clubs; முசலாயுதத்தால் செய்யும் போர். மௌசலபருவம. (பாரத.)

மௌசாளி maucāḷi, n. (Mus.) A primary melody-type, one of 16 peru-m-paṇ, q.v.; பெரும் பண் பதினாறனுள் ஒன்று. (பிங.)

மௌசு maucu, n. <U. mouz. 1. Ardent desire, longing; மிகுபிரியம். அதின்பேரில் எனக்கு மௌசு. 2. Being in great demand, as an article; சரக்கின் பிரியம். Loc. 3. Attractiveness; கவர்ச்சி. Loc. 4. Pomp; ஆடம்பரம். கலியாணம மௌசாக நடந்தது. Loc.

மௌஞ்சி mauñci, n. <mauñjī. 1. Reedy sugarcane. See முஞ்சி, 1. (யாழ். அக.) 2. Girdle or waist-cord of a Brahmin, made of three strings of muñja grass; முஞ்சிப் புல்லாற் செய்த அரைஞாண். Loc.

மௌட்டியம் mauṭṭiyam, n. <maudhya. Ignorance, folly; அறியாமை. (W.)

மௌட்டியன் mauṭṭiyaṉ, n. <maudhya. Fool; முட்டாள். Colloq.

மௌட்டை mauṭṭai, n. <mauṣṭā. Fisticuffs, blow with the fist; முஷ்டிக்குத்து. (யாழ். அக.)

மௌடி mauṭi, n. Snake-charmer's pipe. See மகிடி².

மௌண்டிதம் mauṇṭitam, n. An Upaniṣad; ஓர் உபநிடதம். (சங். அக.)

மௌண்டிதன் mauṇṭitaṉ, n. <muṇḍita. Person with shaven head; தலைமழிச்சப் பெற்றவன்.

மௌண்டிரம் mauṇṭiram, n. An Upaniṣad; ஓர் உபநிடதம். (W.)

மௌத்திகதண்டுலம் mauttika-taṇṭulam, n. <mauktika-taṇḍula. White species of great millet; வெண்சோளம். (சங். அக.)

மௌத்திகம் mauttikam, n. <mauktika. Pearl; முத்து. (சூடா.)

மௌத்திகன் mauttikaṉ, n. See மௌகூர்த்திகன். (சிலப். 26, 25, அரும.)

மௌத்து mauttu, n. <Arab. maut. Death; மரணம்.

மௌர்வி maurvi, n. <maurvī. Bowstring; வில்லின் நாண். (W.)

மௌராஸ் maurās, n. <Arab maurās. That which is hereditary or inherited, inheritance; பரம்பரையுரிமையாற் பெற்றது. (C. G.)

மௌரியர் mauriyar, n. <Maurya. See மோரியர், 1.

மௌல்வி maulvi, n. <Arab. maulawī. Muhammadan lawyer, expounder of Muhammadan law; learned, religious Muslim (R.F.); முகம்மதியமத வித்துவான்.

மௌலன் maulaṉ, n. <maula. Man born of a good family; நற்குலத்தான். (யாழ். அக.)

மௌலானா maulāṉā, n. <Arab. maulānā. See மௌல்வி.

மௌலி mauli, n. <mauli. 1. Tuft or lock of hair left unshaven on the crown of the head, மயிர்முடி. (திவா.) 2. Matted locks, as of an ascetic; சடைமுடி. (அக. நி.) 3. Crown; diadem; மணிமுடி. தாரணி மௌலி பத்தும் (கம்பரா. கும்பகர்ண. 1). (பிங.) 4. Head; தலை. (அக. நி.) 5. Wreath of flowers; தார். (அக. நி.) 6. Ornamental head or top, as of a tower; கோபுர முதலியவற்றின் சிகரம். Loc. 7. Toddy; கள். (யாழ். அக.)

மௌவல் mauval, n. 1. Wild jasmine. See காட்டுமல்லிகை. ஞாழன் மௌவல் (குறிஞ்சிப். 81). 2. Arabian jasmine. See முல்லை, 1. (சூடா.) 3. Lotus; தாமரை. மௌவ லீணமலர் மேலுறை வாளொடு (தேவா. 1213, 13).

மௌவலாரம் mauvalāram, n. [T. muvva.] Anklet with small bells; சலங்கைச் சிலம்பு. Loc.

மௌவழகன் mauvaḻakaṉ, n. A breed of horse; குதிரைச்சாதிவகை. (அசுவசா. 151.)

மௌவை mauvai, n. cf. ஔவை. Mother; தாய். (அக. நி.)

மௌனசாமியார் mauṉa-cāmiyār, n. <mauna+. Ascetic who has taken a vow of silence; பேசாவிரதம் பூண்ட பெரியோர்.

மௌனம் mauṉam, n. <mauna. Silence; muteness; taciturnity; பேசாமை. (திருக்களிற்றுப. 28, உரை.)

மௌனமந்திரம் mauṉa-mantiram, n. <id.+. A mantra meditated in silence; மனத்துள் செபிக்கும் மந்திரவகை. (திருமுரு. பக. 50, கீழ்க்குறிப்பு.)

மௌனவிரதம் mauṉa-viratam, n. <id. +. Vow of silence; பேசாதிருக்கும் விரதம்.

மௌனி mauṉi, n. <maunin. 1. One who has taken a vow of silence; silent ascetic; மௌனவிரதம் பூண்டவன். உரைதநிலன் முனிவன் மௌனியாய (கம்பரா. வேள்வி. 43). 2. Tortoise; ஆமை. (சங். அக.)

மௌஜா maujā, n. <Arab. mawza. 1. Chief village, its lands and habitations; தலைமைக்கிராமம். (C. G.) 2. Hamlet. See மஜரா.

மௌஜூதாத் maujūtāt, n. <Arab. mawjūdāt. Assets, effects; funds; சொத்து. (C. G.)

மௌஜே maujē, n. See மௌஜா. (W.)

மௌஜேவார் maujē-vār, n. <மௌஜே+. Detailed account according to towns or villages; கிராமவாரியாக வைக்கப்பட்ட கணக்கு. (W.)

மௌஜேவாரி maujēvāri, n. See மௌஜேவார். (W.)

மௌஸ் maus, n. See மௌசு.

மௌஸா mausā, n. See மௌஜா, 1.

ய்

ய்[1] y. The 11th consonant, liquid palatal.

ய்[2] y, part. A participle indicating the past tense; இறந்தகாலவிடைநிலை. ஆய், போயது (தொல். சொல். 230, உரை). (வீரசோ. தாது. 7.) (இலக். வி. 47, உரை.)

ய

ய ya. The compound of ய் and அ.

யக்கதரு yakkataru, n. <yakṣa-taru. The banyan tree; ஆலமரம் (இலக். அக.)

யக்கராசன் yakka-rācaṉ, n. <yakṣa-rāja. Kubēra, as the lord of the Yakṣas; [இயக்கர்களுக்கு அரசன்] குபேரன். (யாழ். அக.)

யக்கராத்திரி yakka-rāttiri, n. <yakṣa+. The full moon in the month of Kārttikai; கார்த்திகை மாதத்துப் பௌர்ணமி. (யாழ். அக.)

யக்கன் yakkaṉ, n. <yakṣa. 1. Yakṣa. See இயக்கன், 1. (W.) 2. Kubēra. See இயக்கன், 2. (யாழ். அக.)

யக்ஞம் yakkñam, n. See யக்கியம். (தக்கயாகப. 344, உரை.)

யக்ஞமூர்த்தி yakkña-mūrtti, n. <yajña +. 1. The God of Fire; அக்கினிதேவன். (தக்கயாகப. 344, உரை.) 2. See யக்கியபுருடன்.

யக்கியசூத்திரம் yakkiya-cūttiram, n. <id.+. See யக்கியோபவீதம். (யாழ். அக.)

யக்கியபசு yakkiya-pacu, n. <id.+. The animal offered in sacrifice; யாகத்திற் பலியிடுதற்குரிய பிராணி. (யாழ். அக.)

யக்கியபுருடன் yakkiya-puruṭaṉ, n. <id.+. Viṣṇu, as assuming the Form of Sacrifice, [யாகத்தின் உருவினன்] திருமால். (சங். அக.)

யக்கியம் yakkiyam, n. <yajña. 1. See யஞ்ஞம். (W.) 2. Dvāpara, the third yuga; துவாபரயுகம். (யாழ். அக.)

யக்கியயோக்கியம் yakkiya-yōkkiyam, n. <yajña-yōgya. Country fig; அத்தி. (சங். அக.)

யக்கியாரி yakkiyāri, n. <yajñāri. Śiva, as the destroyer of Dakṣa's sacrifice; [தக்கன் யாகத்தை யழித்தவன்] சிவபிரான். (யாழ். அக.)

யக்கியோபவீதம் yakkiyōpavītam, n. <yajñōpavīta. The sacred thread, worn by the members of the first three castes, across the chest and over the left shoulder; இருபிறப்பாளர் இடத்தோளின்மீதிருந்து மார்பின் குறுக்கே அணியும் பூணூல்.

யக்கேசன் yakkēcaṉ, n. <yakṣēśa. Kubēra; குபேரன். (யாழ். அக.)

யக்ஞம் yakñam, n. See யஞ்ஞம்.

யக்ஞோபவீதம் yaknōpavītam, *n.* See யக்ஞோபவீதம். (சேரமிலெர. 28.)

யகிர்த்துச்சூலை yakirttu-c-cūlai, *n.* <*yakrt*+. Hepatitis; கல்லீரல் வீங்கும் நோய். *Loc.*

யங்கோரம் yaṅkōram, *n.* Emblic myrobalan. See நெல்லி, 1.

யசசு yacacu, *n.* <*yaśas*. Honour, glory, fame, renown; புகழ்.

யசசுவி yacacuvi, *n.* <*yaśasvin*. Illustrious person; renowned man; புகழாளன். (சங். அக.)

யசமான் yacamāṉ, *n.* See யசமானன், 2. *Colloq.*

யசமானன் yacamāṉaṉ, *n.* <*yajamāna*. (W.) 1. Sacrificer; யாகத்தலைவன். 2. Master, lord; patron; தலைவன். *Colloq.* 3. Head of a family; வீட்டுத்தலைவன்.

யசனம் yacaṉam, *n.* <*yajana*. The act of sacrificing; வேள்வி செய்கை. (சூடா.)

யசு yacu, *n.* <*Yajus*. Yajur-Vēda, the second of the four Vēdas; வேதம் நான்கனுள் இரண்டாவது. (சிலப். பக். 339, கீழ்க்குறிப்பு.)

யசுசு yacucu, *n.* See யசு. (W.)

யசுர் yacur, *n.* See யசு.

யசுர்வேதம் yacur-vētam, *n.* <*Yajus*+. See யசு.

யசுரு yacuru, *n.* See யசு. (யாழ். அக.)

வடதளம் vaṭa-taḷam, *n.* <வடம்¹+தளம்³. Banyan leaf; ஆலிலை. வடதள வுதர வாணீ (மனோன். 1, 2, 110).

வடதிசை vaṭa-ticai, *n.* <வட+திசை². See வடக்கு.

வடதிசைத்தலைவன் vaṭaticai-t-talaivaṉ, *n.* <வடதிசை+. Kubera, as the regent of the North; குபேரன். (பிங்.)

வடதிசைப்பாலன் vaṭaticai-p-pālaṉ, *n.* <id.+. See வடதிசைத்தலைவன்.

வடதுருவம் vaṭa-turuvam, *n.* <வட+துருவம்¹. The North Pole; வடக்கிலுள்ள துருவம்.

வடதெற்கு vaṭa-teṟku, *n.* <id.+. North and south; வடக்கும் தெற்கும். வடதெற்கு விலங்கி (பதிற்றுப். 31).

வடதேசம் vaṭa-tēcam, *n.* <id.+தேசம்¹. Northern country or region; வடநாடு. (யாழ். அக.)

வடதேசவடமன் vaṭatēca-vaṭamaṉ, *n.* <வடதேசம்+. A sub-sect of *vaṭamaṉ*; வட மருள் ஒரு பிரிவினன்.

வடந்தை vaṭantai, *n.* <வடக்கு. 1. That which is in the north; வடதிசையிலுள்ளது. வடந்தைத் தணவளி (நெடுநல். 173). 2. North wind; வடகாற்று. தணபனி வடந்தை (ஐங்குறு. 263).

வடந்தைத்தீ vaṭantai-t-tī, *n.* prob. வடந்தை+தீ³. See வடவாமுகாக்கினி. சுடாநதெரி வடநதைத தீயும் (காஞ்சிப்பு. இருபத். 384).

வடநூல் vaṭa-nūl, *n.* <வட+. Sanskrit literature; வடமொழியிலுள்ள நூல். வடநூன் மரபும் புகன்றுகொணடே (வீரசோ. பாயி. 3).

வடநூலார் vaṭanūlār, *n.* <வடநூல். Sanskritists; வடமொழியில் வல்லார். வடநூலார தாமே பதிகமு முரையுஞ் செய்வார (பி. வி. 3, உரை).

வடநெறி vaṭa-neṟi, *n.* <வட+நெறி³. Literary convention or usage in Sanskrit; வட நூன்முறை. மன்னும் வடநெறியே வேண்டினோம (திவ். இயற். பெரிய. ம. 40).

வடப்படி vaṭa-p-paṭi, *n.* id.+படி³. A weight of 144 *palam;* 144 பலங்கொண்ட நிறை. (G. Tn. D. I, 237.)

வடபடி vaṭa-paṭi, *n.* See வடப்படி. *Loc.*

வடபத்தி vaṭapatti, *n.* prob. *vaṭa-patra*. See வடபத்திரம். (சங். அக.)

வடபத்திரசாயி vaṭapattira-cāyi, *n.* <*vaṭa-patra-śāyin*. Viṣṇu, as sleeping on a banyan leaf; ஆலிலையில் பள்ளிகொண்ட திருமால்.

வடபத்திரம் vaṭa-pattiram, *n.* <*vaṭa-patra*. A tree; மரவகை. (யாழ். அக.)

வடபரதம் vaṭa-paratam, *n.* <வட+பரதம்¹. Northern India; வட இந்தியா. (W.)

வடபல்லி vaṭapalli, *n.* Woman's ornament for the forehead, part of *talai-k-kōlam;* தலைக்கோலத்திற் புல்லக மென்னும் ஆபரணம். (சிலப். 6, 107, உரை.)

வடபால்விதேகம் vaṭa-pāl-vitēkam, *n.* <வட+பால்²+. A continent, one of *nava-kaṇṭam*, q.v.; நவகண்டத்துள் ஒன்று. (பிங்.)

வடபாலிரேவதம் vaṭa-pāl-irēvatam, *n* <id.+id.+. A continent, one of *nava-kaṇṭam*, q.v.; நவகண்டத்துள் ஒன்று. (பிங்.)

வடபாற்பரதம் vaṭa-pāṟ-paratam, *n.* <id.+id.+. A continent, one of *nava-kaṇṭam*, q.v.; நவகண்டத்துள் ஒன்று. (பிங்.)

வடபுலம் vaṭa-pulam, *n.* <id.+. 1. Northern country; வடதேசம். வடபுல விமயத்து வாஙகுவிற் பொறித்த (சிறுபாண. 48). 2. *Uttara-kuru*, the earthly paradise; உத்தரகுரு. வடபுல வாழ்நரிற் பெரிதமாந்து (பதிற்றுப. 68, 13).

வடபூமி vaṭa-pūmi, *n.* <id.+. Northern country; வடதேசம்.

வடபெருங்கல் vaṭa-peru-ṅ-kal, *n.* <id. +பெருமை+. See வடமலை, 2. தென்குமரி வட பெருஙகல் (மதுரைக். 70).

வடபொழில் vaṭa-poḻil, *n.* <id.+. Northern region; வடக்கிலுள்ள பிரதேசம். நாவலந் தணபொழில் வடபொழி லாயிடை (பரிபா. 5, 8).

வடம்^{1} vaṭam, n. <*vaṭa*. 1. Cable, large rope, as for drawing a temple-car; கனமான கயிறு. வடமறறது (நன். 219, மயிலை.). 2. Cord; தாம்பு. (சூடா.) 3. A loop of coir rope, used for climbing palm-trees; மரமேறவுதவுங் கயிறு. *Loc.* 4. Bowstring; வில்லின் நாணி. (பிங்.) 5. String of jewels; மணிவடம். வடங்கள் அசையும்படி உடுத்து (திருமுரு. 204, உரை). (சூடா.) 6. Strands of a garland; chains of a necklace; சரம். இடைமங்கை கொங்கை வடமலைய (அஷ்டப. திருவேங்கடத்தந். 39). 7. Arrangement; ஒழுங்கு. தொடங்கற் காலை வடமபட விளங்கும (ஞானா. 14, 41). 8. Banyan; ஆலமரம். (சூடா.) வடநிழற்கண ணூடிருந்த குருவே (தாயு. கருணா. 41).

வடம்^{2} vaṭam, n. 1. See வட்டம்^{1}, 1. (அக. நி.) 2. Plank of wood; பலகை. பக்கவடம்; கதவுவடம். *Nāñ.*

வடம்பிடி-த்தல் vaṭam-piṭi-, v. intr. <வடம்^{1}+. To draw a temple-car by seizing it by its cables; வடத்தைப்பிடித்துத் தேரிழுத்தல்.

வடமகிதரம் vaṭa-makitaram, n. <வட+. See வடமலை, 1. (இலக். அக.) சிரவுட மகிதர மெனக் குவிதது (பாரத. இராசசூய. 44).

வடமதுரை vaṭa-maturai, n. <id.+. Muttra, in North India; வட இந்தியாவிலுள்ள மதுராபுரி. மாயனை மன்னு வடமதுரை மைந்தனை (திவ். திருப்பா. 5).

வடமருது vaṭa-marutu, n. prob. வடம்^{1}+. Flowering murdah. See பூமருது, 1. (L.)

வடமலை vaṭa-malai, n. <வட+மலை^{4}. 1. Mt. Mēru; மகாமேரு. வடமலைப்பிறந்த மணியும பொன்னும் (பட்டினப். 187). 2. The Himalayas; இமயமலை. வடமலைப் பெயர்குவை யாயின (புறநா. 67). 3. The Tiruppati Hills, as the northern boundary of the Tamil country; திருப்பதிமலை. தென்னனுயர் பொருப்பும தெய்வ வடமலையும (திவ். இயற். பெரிய ம. 6). 4. See, வடவரை, 2. மன்னு வடமலையை மத்தாக (திவ். இயற். பெரிய. ம. 105). 5. See வடமலையப்பப்பிள்ளையன். (பெருந்தொ. 1321.)

வடமலையப்பபிள்ளையன் vaṭamalai-y-appapiḷḷaiyan, n. <வடமலையப்பன்+பிள்ளையன்^{1}. A viceroy of the Tinnevelly regions under the Naiks of Madura, 1706 A.D., author of Macca-purāṇam; நாயகவரசரின் பிரதிநிதியாய்த் திருநெல்வேலிச்சீமையை யாண்டவரும் மச்சபுராணம் இயற்றியவருமான பிரபு.

வடமலையப்பன் vaṭamalai-y-appan, n. <வடமலை+. See வடமலையப்பபிள்ளையன். (பெருந்தொ. 1327.)

வடமலையான் vaṭamalaiyān, n. <id. 1. Viṣṇu, as residing in the Tiruppati Hills; திருப்பதித் திருமால். வடமலையாய் . . . அஞ்சேலென்று வந்தருளே (அஷ்டப. திருவேங்கடத்தந். 6.) 2. A kind of paddy; ஒருவகை நெல். (W.)

வடமலைவாண்டன் vaṭamalai-vāṇṭan, n. <id.+வாழ்நன. See வடமலையான். (W.)

வடமலைவாணன் vaṭamalai-vāṇan, n. <id+id. See வடமலையான். (யாழ். அக.)

வடமன் vaṭaman, n. <வடக்கு. 1. Man of the north country; வடநாட்டான். 2. A division of Smārta Brahmins, as from the north; சுமார்த்தப்பிராமணரில் ஒருபிரிவினன்.

வடமீதி vaṭamīti, n. See வடவீதி. *Nāñ.*

வடமீன் vaṭa-mīn, n. <வட+மீன்^{1}. 1. See அருந்ததி, 2. 2. Arundhatī. See அருந்ததி, 1. வடமீன் புரையுங் கற்பின் மடமொழி (புறநா. 122).

வடமுகம்^{1} vaṭa-mukam, n. <id.+. The northern quarter; வடபால். (யாழ். அக.)

வடமுகம்^{2} vaṭamukam, n. prob. மடைமுகம. Head of a water-course; சால்வாயின் தலைப்பு. (J.)

வடமுகில் vaṭamukil, n. Pāṇḍyan; பாண்டியன். (அக. நி.)

வடமூலகன் vaṭamūlakan, n. <*vaṭa-mūla-ga*. Śiva; சிவபிரான். (சங். அக.)

வடமேரு vaṭa-mēru, n. <வட+. See வடமலை, 1. கல்லன்றே . . . வடமேரு (கம்பரா. மாயாசனகப். 81).

வடமேற்கு vaṭa-meṟku, n. <id.+. North-west; வடக்கும் மேற்குஞ் சேர்ந்த கோணத் திசை.

வடமேற்றிசை vaṭa-meṟṟicai, n. <id. +மேல்+திசை^{2}. See வடமேற்கு.

வடமேற்றிசைக்குறி vaṭameṟṟicai-k-kuṟi, n. <வடமேற்றிசை+. Ass; கழுதை. (திவா.)

வடமேற்றிசைப்பாலன் vaṭameṟṟicai-p-pālan, n. <id.+பாலன்^{2}. Vāyu, as the regent of the North-west; வாயு. (யாழ். அக.)

வடமொழி vaṭa-moḻi, n. <வட+. 1. Sanskrit language; சம்ஸ்கிருத பாஷை. வடமொழி முதலான பிறகலைக்கடல்களுள்ளும் (நன். 459, மயிலை.). 2. (Gram.) Sanskrit word; வடசொல். செந்தமிழ்க்கண வந்த வடமொழியு மாற்றுதே (யாப். வி. பக். 461).

வடமொழியாட்டி vaṭamoḻi-y-āṭṭi, n. <வடமொழி+ஆட்டி^{1}. Fem. of வடமொழியாளன். Brahmin woman; பார்ப்பனி. வடமொழியாட்டி மறைமுறை யெய்தி (மணி. 13, 73).

வடமொழியாளன் vaṭamoḻi-y-āḷaṉ, *n.* <id.+ஆள்-. Brahmin; பார்ப்பான். *வடமொழி யாளரொடு வருவோன் கண்டு* (மணி. 5, 40).

வடயம் vaṭayam, *n.* See வடையம். *Loc.*

வடரம் vaṭaram, *n.* <*vaṭara.* (யாழ். அக.) 1. Head-dress; தலைச்சீலை. 2. Mat; பாய்.

வடராசி vaṭarāci, *n.* Variegated mountain ebony. See மந்தாரை, 2. (Nels.)

வடல் vaṭal, *n.* <*vaṭa.* Banyan. See ஆல்[1], 2. (மலை.)

வடலி vaṭali, *n.* <மடல். Young palmyra tree, one of five *itarayiṭṭam-paṉai*, q.v.; இதரயிட்டம்பனை ஐந்தனு ளொன்றான இளம்பனை. (G. Tn. D. I, 307.)

வடவர் vaṭavar, *n.* <வடக்கு. Northerners; வடநாட்டார். *வடவர் வாடக் குடவர் கூம்ப* (பட்டினப். 276).

வடவரை vaṭa-varai, *n.* <வட+வரை. 1. See வடமலை, 1. *வடவரை கொட்டையாய்ச் சூழ்ந்த* (உத்தரரா. தோத்திர. 15). 2. Mt. Mandara; மந்தரகிரி. *வடவரை மத்தாக* (சிலப். 17, முன்னிலைப்பரவல், 1).

வடவளம் vaṭa-vaḷam, *n.* <id.+. Produce of the Northern country; வடநாட்டில் விளைந்த பண்டம். *வடவளந் தரூஉ நாவாய்* (பெரும்பாண். 320).

வடவனம் vaṭa-vaṉam, *n.* <*vaṭa*+. A species of tree; மரவகை. *வடவனம் வாகை* (குறிஞ்சிப். 67).

வடவனல் vaṭa-v-aṉal, *n.* <வட+. See வடவாமுகாக்கினி. *வெள்ளத்திடைவாழ் வடவனலை* (கம்பரா. தைலமா. 86).

வடவனலம் vaṭa-v-aṉalam, *n.* <id.+. cf. *vaḍavānala.* See வடவாமுகாக்கினி. *கடுகிய வடவனலத் திணைவைத்தது* (கலிங். 402).

வடவாக்கனல் vaṭavā-k-kaṉal, *n.* <*vaḍavā*+. See வடவாமுகாக்கினி. (யாழ். அக.)

வடவாக்கினி vaṭavākkiṉi, *n.* <*vaḍavāgni.* See வடவாமுகாக்கினி. (சங். அக.)

வடவாசுதர் vaṭavā-cutar, *n.* <*vaḍavā*+*suta.* The Aśvins; அசுவினிதேவர். (யாழ். அக.)

வடவாமுகம் vaṭavā-mukam, *n.* <*vaḍavā-mukha.* 1. See வடவாமுகாக்கினி. *வடவாமுகத்தழ லொடேட* (பிரபோத. 19, 1). 2. The nether region. See நாகலோகம்[2]. (உரி. நி.)

வடவாமுகாக்கினி vaṭavāmukākkiṉi, *n.* <id.+*agni.* Submarine fire in the shape of a mare's head, believed to consume the world at the end of a yuga; பெண்குதிரை முகத்தின் வடிவோடு கடற்குள் தங்கியிருந்து யுகாந்தத்தில் மேலே கிளம்பி உலகத்தை எரித்து விடுவதாகக் கருதப்படும் தீ. (தக்கயாகப். 67, உரை.)

வடவாயிற்செல்வி vaṭa-vāyiṟ-celvi, *n.* <வட+வாயில்+. See வடக்குவாசற்செல்வி. *Nāñ.*

வடவானலம் vaṭavāṉalam, *n.* <*vaḍavā-nala.* See வடவாமுகாக்கினி. *மண்ணு மின்றி வடவானலமு மின்றி* (தக்கயாகப். 408).

வடவிதேகம் vaṭa-vitēkam, *n.* <வட+. See வடபாலவிதேகம். (யாழ். அக.)

வடவிரேபதம் vaṭa-v-irēpatam, *n.* <id.+இரேவதம். See வடபாலிரேவதம்.

வடவீதி vaṭa-vīti, *n.* <id.+. The northern half; வடபாதி. *Nāñ.*

வடவு vaṭavu, *n.* Fatigue; மெலிவு. *ஆருத வடவாற* (தக்கயாகப். 557).

வடவேங்கடம் vaṭa-vēṅkaṭam, *n.* <வட+. The Tirupati Hills, as in the northern part of the Tamil country; திருப்பதி மலை. *வடவேங்கடந் தென்குமரியாயிடை* (தொல். பாயி.).

வடவை vaṭavai, *n.* <*vaḍavā.* 1. Mare; பெண் குதிரை. (பிங்.) 2. Woman of horse-like nature, one of three *makaḷir-cāti*, q.v.; மகளிர் சாதிமூன்றனுள் குதிரைச்சாதிப் பெண். (கொக்கோ. 3, 6.) 3. See வடவாமுகாக்கினி. (பிங்.) 4. Slave-girl; அடிமைப் பெண். (யாழ். அக.) 5. Buffalo; எருமை. (பிங்.) 6. Female elephant; பெண்யானை. (பிங்.)

வடவைக்கனல் vaṭavai-k-kaṉal, *n.* <வடவை+. See வடவாமுகாக்கினி. *வடவைக் கனன்மாவும்* (தக்கயாகப். 694).

வடவைத்தீ vaṭavai-t-tī, *n.* <id.+. See வடவாமுகாக்கினி. (தக்கயாகப். 475, உரை.)

வடஸ்திங்கி vaṭastiṅki, *n.* Main clew-garnet; purchase, consisting of two single blocks and a fall, by which the lower corner of a square mainsail is hauled up to the yard; கப்பற்பாயின் அடிப்புறத்தை மேலிழுக்கும் கருவி. *Naut.*

வடாகரம் vaṭākaram, *n.* <*vaṭākara.* Rope; கயிறு. (யாழ். அக.)

வடாது vaṭātu, *n.* <வடக்கு. 1. That which is in the north; வடக்குள்ளது. *வடாஅது பனிபடு நெடுவரை* (புறநா. 6). 2. North; வடக்கு. *வடாஅது தென்றும் பாராசா வகுத்த நேமி* (பாரத. பதின்மூன்று. 80).

வடாம் vaṭām, *n.* <*vaḍā*. See வடகம்[1]. *Brah.*

வடாரகம் vaṭārakam, *n.* <*vaṭāraka*. String, rope; கயிறு. (இலக். அக.)

வடி[1]-தல் vaṭi-, *4 v. intr.* 1. To drip, trickle, as water; ஒழுகுதல். *சீழ் வடிகின்றது.* 2. To be diminished, as water in a river; to flow back, ebb, as tide; நீர் முதலியன வற்றுதல். *வடியாத பவக்கடலும் வடிந்து* (அஷ்டப். திருவரங். கலம். 93). 3. To be perfected, as pronunciation; திருந்துதல். *வடியா நாவின்* (புறநா. 47). 4. To be clear, as sound; தெளிதல். *வடிமணி நின்றியம்ப* (பு. வெ. 10, 14, பக். 116). 5. To become beautiful; அழகுபெறுதல். *வடுவின்று வடிந்த யாக்கையன்* (புறநா. 180). 6. To lengthen, become long; நீளுதல். (சூடா.) *குழைவிரவு வடிகாதா* (தேவா. 1091, 1).

வடி[2]-த்தல் vaṭi-, *11 v. tr.* Caus. of வடி[1]-. 1. To cause to flow out; to shed, as tears; to drain; வடியச் செய்தல். *கட்புனல் வடித்து* (தனிப்பா. i, 351, 73). 2. To strain, as conjee from cooked rice; to filter; வடிகட்டுதல். *மற்றொரு கால் வடித்தெடுத்து* (தனிப்பா. i, 182, 5). 3. To squeeze out; பிழிதல். *பன்றிக் கூழ்ப பத்தரிற் றேமா வடித்தற்றால்* (நாலடி, 257). 4. To distill, as oil; தைலமிறக்குதல். *கடத்திற வடி* (தைலவ. தைல. 116). 5. To refine, polish; to perfect; திருத்தமாகச் செய்தல். *வானுட்கும் வடிநீண் மதில* (புறநா. 18). 6. To express in choice language; சாரமான சொல்லா லமைதல். *வாயினால் வடித்த நுணணூல்* (சீவக. 271). 7. To win over; to bring under control; வசமாக்குதல். (சூடா.) 8. To tame, train, as wild elephants; பழக்குதல். *கதிக்குற வடிப்போர் கவின்பெறு வீதியும்* (மணி. 28, 61). 9. To practise; பயிலுதல். *வாளிலை வடிபப வீங்கி* (சீவக. 1450). 10. To cook, as rice; சோறு சமைத்தல். *Colloq.* 11. To sharpen; கூராக்குதல். *வடித்தாரை வெள்வேல்* (சீவக. 2320) (சங். அக.) 12. To comb and fasten, as hair; வாரிமுடித்தல். (நற். 23). 13. To flatten out; தகடாக்குதல். *இரும்பு வடித்தன்ன மடியா மென்றோல்* (பெரும்பாண். 222). 14. To lengthen; நீளமாக்குதல். 15. To stroke with the fingers over, as the string of a lute in playing; யாழ்நரம்பை உருவுதல். *வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்தும்* (பொருந. 23). 16. To equip, as a horse; அலங்கரித்தல். *வடித்த போத்தொடு* (சீவக. 1773). 17. To investigate, examine; ஆராய்தல். *வடித்த நூற்கேள்வியார்* (சீவக. 1846). 18. To select, choose; ஆராய்ந்தெடுத்தல். *மாரனிக்குவில்வளைத் தலர்க்கணை வடித்து* (பிரபோத. 30, 59). 19. To pluck, nip; கிள்ளியெடுத்தல். *கிளிபோல் காய கிளைத்துணர் வடித்து* (அகநா. 37).

வடி[3] vaṭi, *n.* <வடி[1]-. 1. Honey; தேன். *வடிமலர் வள்ளம்* (சூளா. இரத. 45). *வடிகொள பொழிலின்* (தேவா. 116, 3). 2. Toddy; கள். (பிங்.) 3. Lengthening; நீளுகை. (அரு. நி.)

வடி[4] vaṭi, *n.* <வடி[2]-. 1. Filtration, distillation; வடித்தெடுக்கை. *வடியுறு தீந்தேறல்* (பு. வெ. 1, 19). 2. Sharpness; கூர்மை. *வடியாரு மூவிலை வேல்* (தேவா. 830, 6). (நாமதீப.) 3. Combing and fastening, as of the hair; வாரிமுடிக்கை. *வடிக்கொள கூழை யாயமொடு* (நற். 23). 4. Scrutiny, investigation; ஆராய்ச்சி. *வடியமை* (சீவக. 1685, உரை). 5. See வடிகயிறு (யாழ். அக.) 6. Rope; கயிறு. (யாழ். அக.) 7. cf. பட்டி[1]. Dog; நாய். (சது.)

வடி[5] vaṭi, *n.* cf. வடு[1]. 1. Tender, green mango; மாம்பிஞ்சு. *நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த* (பெரும்பாண். 309). 2. Piece of green mango, cut longitudinally in two; மாம்பிஞ்சின் பிளவு. *வடியன்ன வுண்கட்கு* (கலித். 64).

வடி[6] vaṭi, *n.* cf. வளி. Wind; காற்று. *வடிபட வீங்கும் வணணக் கதலிகை* (பெருங். மகத. 3, 36).

வடி[7] vaṭi, *n.* cf. வடிவு[1]. Form, shape; உருவம். *கரியது வடிகொடு* (தேவா. 815, 5).

வடி[8] vaṭi, *n.* [T. *baḍita*, K. *baḍi*, M. *vaḍi*.] Small cane or stick; சிறுதடி. *Nāñ.*

வடிக்கதிர் vaṭi-k-katir, *n.* <வடி[4]+. Spindle, instrument for twisting threads; நூல் முறுக்குங் கருவி. (யாழ். அக.)

வடிக்கயிறு vaṭi-k-kayiṟu, *n.* <id.+. See வடிகயிறு. *வடிக்கயிறு முட்கோல் பற்றிய தடக்கையுள பாகு* (கந்தபு. சூரபன். வதை. 218).

வடிக்கருவி vaṭi-k-karuvi, *n.* <id.+. See வடிக்கதிர். (யாழ். அக.)

வடிகஞ்சி vaṭi-kañci, *n.* <வடி[2]-+கஞ்சி[1]. Conjee, rice-water strained in cooking; சோறு வடித்த கஞ்சி. (பதார்த்த. 1389.)

வடிகட்டு-தல் vaṭi-kaṭṭu-, *v. tr.* <வடி[4]+. 1. To strain; to filter; வடித்தல். *நீரை வடிகட்டியெடு.* 2. To epitomise; to give the purport of; சாரத்தைத் திரட்டுதல்.

வடிகயிறு vaṭi-kayiṟu, *n.* <வடி[2]-+. Rein; குதிரையின் வாய்க்கயிறு. *வடிகயி றூய்ந்து* (சீவக. 794).

வடிகாது vaṭi-kātu, *n.* <வடி[1]-+காது[1]. Perforated ear lengthened by weighting the earlobes; தொங்குந் துளைச்செவி. *குழைவிரவு வடிகாதா* (தேவா. 1091, 1).

வடிகால் vaṭi-kāl, *n.* <id.+கால்[1]. Outlet; நீரை வடியவிடுங் கால்வாய்.

வடிசதுக்கம் vaṭi-catukkam, *n.* <வடி[2]-+. Place where filtration is done; தைலம் முதலியன வடிக்கும் இடம். (தைலவ. தைல. பாயி. 44.)

வடிசம் vaṭicam, *n.* < *baḍiśa.* Fish-hook; தூண்டில். (யாழ். அக.)

வடிசம்பா vaṭi-campā, *n.* prob. வடி[4]+சம்பா[1]. A kind of paddy; நெல்வகை.

வடிசல்[1] vaṭical, *n.* <வடி[1]-. (W.) 1. Ebbing; decreasing; நீர் முதலியன வற்றுகை. 2. Being long, lengthening; நீளுகை.

வடிசல்[2] vaṭical, *n.* <வடி[2]-. 1. Straining, filtering; வடிக்கை. 2. Rice boiled and strained; வடித்த சோறு. வடிசல்லைவேதநியம. (J.)

வடிசற்காது vaṭicaṟ-kātu, *n.* <வடிசல்[1]+காது[1]. See வடிகாது. (W.)

வடிசாந்து vaṭi-cāntu, *n.* <வடி[2]-+. Superior fragrant unguent; நற்சாந்து. (யாழ். அக.)

வடித்துக்கொட்டு-தல் vaṭittu-k-koṭṭu-, *v. tr.* <id.+. To cook and serve; சமைத்துப் படைத்தல்.

வடிதங்கம் vaṭi-taṅkam, *n.* <id.+. Purified gold; சுத்தஞ்செய்த தங்கம். (யாழ். அக.)

வடிதட்டு vaṭi-taṭṭu, *n.* <id+தட்டு[2]. A kind of colander; சிப்பற்றட்டுவகை. *Loc.*

வடிதமிழ் vaṭi-tamiḻ, *n.* <id.+. Choice Tamil; தெளிந்த தமிழ். (யாழ். அக.)

வடிதயிர் vaṭi-tayir, *n.* <id.+. Thick mass of curds; கட்டித்தயிர். வைத்த நெய்யுங் காய்ந்த பாலும் வடிதயிரு நறுவெண்ணெயும் (திவ். பெரியாழ். 2, 2, 2).

வடிதேய்-த்தல் vaṭi-tēy-, *v. tr.* <வடி[2]-+தேய்[2]-. To polish, as jewels; to burnish, as gold; பொடியிட்டுத்தேய்த்து மினுக்குதல். *Nāñ.*

வடிந்தகாது vaṭinta-kātu, *n.* <வடி[1]-+காது[1]. See வடிகாது. (W.)

வடிப்பம் vaṭippam, *n.* prob. வடி?-. cf. வடிவம். 1. Elegance; செப்பம். வடிப்பம் வடிப்பமாய்ப் பேசிக் கொள்ளாதே (இராமநா. கிஷ். 9). 2. Shapeliness; வடிவழகு. ராமன் வடிப்பங்கள் கண்டுகொண்டு (இராமநா. பால. 20). 3. Beauty; அழகு. (W.) 4. Capacity; ability; திறம். (யாழ். அக.)

வடிப்பு vaṭippu, *n.* <id. 1. Straining, filtering; வடிக்கை. (யாழ். அக.) 2. Selecting, choosing; தேர்ந்தெடுக்கை. 3. Iron rod; இருப்புச் சலாகை. (யாழ். அக.)

வடிப்போர் vaṭippōr, *n.* <id. Trainers, as of elephants; யானை முதலியன பயிற்றுவோர். புதுக்கோள் யானையும் . . . பொற்றாப் புரவியுங் கதிக்குற வடிப்போர் (மணி. 28, 61).

வடிபலகை vaṭi-palakai, *n.* <id.+. A flat piece of wood, used as a strainer in cooking rice; சோறுவடிக்க உதவும் சிறு மரப்பலகை. *Tinn.*

வடிபானை vaṭi-pāṉai, *n.* <id.+. 1. Vessel for cooking rice; சோறுசமைக்கும் பாத்திரம். 2. Condenser in a distilling apparatus; pot which receives the distilled liquid; காய்ச்சுஞ் சரக்கின் ஆவியைக் குளிரச்செய்து திராவகமாக வடிக்கும் பானை. (W.)

வடிம்பிடு-தல் vaṭimpiṭu-, *v. tr.* <வடிம்பு+இடு-. 1. To compel; நிர்ப்பந்தித்தல். வடிம்பிட்டு ஆசிரயிக்கைக்காக (ஈடு, 10, 1, 4). 2. To rise and start with a lever, as a temple-car; இரதத்தைத் தணிபோட்டுக் கிளப்புதல். (ஈடு, 7, 2, 5, அரும்.) 3. To urge, move; தூண்டுதல். நெஞ்சிலே வடிமபிட்டு . . . ஸ்தோத்ரம் பண்ணுகின்றாள் (ஈடு, 7, 2, 5). 4. To slander, blame; பழிகூறுதல். தாய் மாரும் ஊரவரும் வடிம்பிடுகிறார்களோ வென்று (திவ். திருநெடுந். 21, வியா. பக். 170).

வடிம்பு vaṭimpu, *n.* prob. வடி[1]-. 1. Border; edge, as of garment; blade, as of a knife; விளிம்பு. பொன்வடிம் பிழைத்த வான்பகழி (கம்பரா. கிளை. 38). 2. Extremity, as of the foot; கால் முதலியவற்றின் விளிம்பு. ஏற்றெருமை நெஞ்சம் வடிம்பி னிடந்திட்டு (கலித். 103). 3. Eaves, edge of a roof; கூரைச்சாய்வு. (W.) 4. Lever; தேர் முதலியவற்றைக் கிளப்புந் தணிமரம். ரததேரபாதி வடிம்பாலே தாக்கி (ஈடு, 1, 4, 6). 5. See வடிம்புக்கம்பி. *Loc.* 6. Mark, scar; தழும்பு. *Tinn.* 7. Reproach, blame; பழி. தாய்மாரும் ஊரவரும வடிம்பிடுகிறார்களோ வென்று (திவ். திருநெடுந். 21, வியா. பக். 170).

வடிம்புக்கம்பி vaṭimpu-k-kampi, *n.* <வடிம்பு+கம்பி[1]. Spar; தாங்குமரம். *Loc.*

வடிம்புக்கழி vaṭimpu-k-kaḻi, *n.* <id.+கழி[4]. Transverse piece in roofing; குறுக்கு விட்டம். (யாழ் அக.)

வடிம்புபிடி-த்தல் vaṭimpu-piṭi-, *v. intr.* <id.+. To tie cross timbers of a roof; குறுக்கு விட்டந் தொடுத்தல். (W.)

வடிமணி vaṭi-maṇi, *n.* <வடி[1]-+. Clear-sounding bell; தெளிந்த ஓசையுள்ள மணி. வடிமணி நின்றியம்ப (பு. வெ. 10, 14, பக். 116).

வடியல் vaṭiyal, *n.* <வடி²-. 1. See வடிசல்², 1. 2. Strained or filtered liquid; வடித்த நீர் முதலியன. (யாழ். அக.) 3. That which is cooked; சமைக்கப்பட்டது. நான்குபடியரிசி வடியல்.

வடியிடு-தல் vaṭi-y-iṭu-, *v. tr.* <id.+. To be filtered; வடித்தெடுத்தல். தெள்ளிமறை வடியிட்ட வமுதப்பிழம்பே (தாயு. கருணா. 8).

வடியெண்ணெய் vaṭi-y-eṇṇey, *n.* <id.+. Clarified medicinal oil; வடித்தெடுத்த மருந்தெண்ணெய். (W.)

வடிவணங்கு vaṭivaṇaṅku, *n.* <வடிவு+அணங்கு. Beautiful lady, as fair-complexioned; அழகிய பெண். ஆதிமா மாபின்வரு வடிவணங்கை (திருவாலவா. 11, 3).

வடிவம் vaṭivam, *n.* cf. படிவம். 1. Form, shape, figure; உருவம். (பிங்.) சங்கம வடிவம் . . . தாபர வடிவம (திருவாலவா. 61, 14). 2. Body; உடல். (யாழ். அக.) 3. Beauty, comeliness, elegance; அழகு. வடிவமங்கைதனைச் சுருதி விதியின் மணம்புணாந்தான் (திருவாலவா. 3, 3). 4. Complexion; colour; நிறம். (அக. நி.) 5. Lustre; காந்தி. 6. True word; truth; மெய்ச்சொல். (அக. நி.)

வடிவவுவமம் vaṭiva-v-uvamam, *n.* <வடிவம்+. (Rhet.) Simile in which the comparison is in respect of shape or form; உருவத்தை ஒப்பித்துக்கூறும் உவமை. (யாழ். அக.)

வடிவாக vaṭivāka, *adv.* <வடிவு¹+ஆ-. Completely; முற்றும். *Tinn.*

வடிவாளன் vaṭivāḷaṉ, *n.* <id.+ஆளன். Handsome man; அழகுள்ளவன். *Loc.*

வடிவிலாக்கூற்று vaṭivilā-k-kūṟṟu, *n.* <id.+இல் neg.+. Voice from an invisible speaker; voice from heaven; அசரீரிவாக்கு. பிறந்திட்டதோா வடிவிலாக்கூற்று (சேதுபு. பராவு. 42).

வடிவு¹ vaṭivu, *n.* <வடிவம். [T. vaḍuvu, M. vaḍivu.] 1. Form, shape; உருவம். வண்ணந்தானது காட்டி வடிவுகாட்டி (திருவாச. 5, 25). 2. Body; உடல். (சூடா.) 3. *Pudendum muliebre;* அல்குல். (பிங்.) 4. Beauty; அழகு. வடிவுடைமலைமகள் (தேவா. 618, 7). வடிவாா வயற்றில்லை (திருக்கோ. 139). 5. Fair complexion; நன்னிறம். 6. Brightness; lustre; காந்தி. வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் (திவ். திருப்பல். 2). 7. True word; truth; மெய்ச்சொல். (அரு. நி.)

வடிவு² vaṭivu, *n.* <வடி²-. *Loc.* 1. That which is strained or filtered; வடித்தது. 2. Outflow; surplus water; வடிந்த நீர்.

வடிவுப்பானை vaṭivu-p-pāṉai, *n.* <வடிவு²+. See வடிபானை. (W.)

வடிவுவமை vaṭi-v-uvamai, *n.* <வடிவு¹+. (Rhet.) See வடிவவுவமம். (சங். அக.)

வடிவெழுத்து vaṭi-v-eḻuttu, *n.* <id.+. 1. A letter, written symbol of an uttered sound, dist. fr. *oli-y-eḻuttu;* ஒலியின் குறியாக எழுதப்படும் அட்சரம். (நன். 256, மயிலை.) (பிங்.) 2. Fine writing; திருந்திய கையெழுத்து. *Loc.*

வடிவேல் vaṭi-vēl, *n.* <வடி⁴+. 1. Sharp lance; கூரிய வேல். வழிக்குத் துணை வடிவேலும செங்கோடன் மயூரமுமே (கந்தரலங். 70). 2. Skanda, as wielding the lance; முருகக்கடவுள். *Loc.*

வடு¹ vaṭu, *n.* 1. cf. வடி⁵. [K. miḍi.] Unripe fruit, especially very green mango; மாம்பிஞ்சு. மாவின் வடுவகிரன்ன கண்ணீா (திருவாச. 9, 2). (பிங்.) 2. Wart, mole; உடல்மச்சம். (W.) 3. Scar, cicatrice, wale; தழும்பு. சாப நோன்ஞாண வடுகொள வழங்கவும (புறநா 14). 4. cf. வடி⁷. Chiselled figure; உளியாற்செதுக்கின உரு. கூருளி பொருத வடுவாழ் நோன்குறடு (சிறுபாண். 252). 5. Mouth of an ulcer or wound; புண்வாய். தாழ் வடுப் புண (பு. வெ. 10, சிறப்பிற். 11). 6. Fault, defect; குற்றம். வடுவில வாயவாள (சிறுபாண. 121). 7. Reproach; பழி. வடுவன்று வேந்தன்றொழில (குறள, 549) 8. Injury, calamity; கேடு. நாயகன் மேனிக்கிலை வடுவென (கமபரா மருத்து. 5). 9. Fine, black sand; கருமணல். வடுவா ழெக்கா மணலினும பலவே (மலைபடு. 556). 10. Copper; செம்பு. (பிங்.) 11. Sword; வாள். (யாழ். அக.) 12. Beetle; வண்டு. (பிங்.)

வடு²-த்தல் vaṭu-, *v.* <வடு¹. *intr.* To bear fruit; பிஞ்சு விடுதல். (W.)—*tr.* To exhibit, manifest; வெளிப்படுத்துதல். வடுத்தெழு கொலை (கலைா. 5).

வடு³ vaṭu, *n.* <*vaṭu.* 1. Celibate student; பிரமசாரி. *Loc.* 2. See வடுகன்¹, 3. 3. Bhairava; வைரவன். 4. Clever boy; புத்திசாலிப் பையன். *Loc.*

வடுக்கொள்(ளு)-தல் vaṭu-k-koḷ-, *v. intr.* <வடு¹+. 1. To bear mark; தழும்பு படுதல். நல்லகம் வடுக்கொள முயங்கி (அகநா. 100). 2. To begin to heal, as a sore; புண் முதலியன ஆறத்தொடங்குதல். *Loc.*

வடுகக்கடவுள் vaṭuka-k-kaṭavuḷ, *n.* <வடுகன்¹+. Bhairava, a form of Śiva; வைரவமூர்த்தி. (திவா.)

வடுகக்காது vaṭuka-k-kātu, *n.* prob. வடுகன்²+காது¹. See வடிகாது. (W.)

வடுகச்சி vaṭukacci, *n.* Fem. of வடுகன்[2]. A woman of Vaṭuka caste; வடுகப்பெண். (W.)

வடுகச்செட்டி vaṭuka-c-ceṭṭi, *n.* < வடுகன்[2] + செட்டி[1]. A caste, ஒரு சாதியார். (W.)

வடுகநம்பி vaṭuka-nampi, *n.* < id. +. A Vaiṣṇava ācārya, disciple of Rāmānuja; இராமானுஜாசாரியரின் சிஷ்யரான ஒரு வைணவாசாரியர். (குருபரம்.)

வடுகநாதன் vaṭuka-nātaṉ, *n.* < வடுகன்[1] +. See வடுகக்கடவுள்.

வடுகப்பறையன் vaṭuka-p-paṟaiyaṉ, *n.* perh. வடுகன்[2] +. A Vaiṣṇava Paraiya of the Telugu country; வைணவசமயசம்பந்தவனான தெலுங்க நாட்டுப் பஞ்சமவகையான். *Loc.*

வடுகர் vaṭukar, *n.* < வடுகு. 1. People of the Telugu country; தெலுங்கர். *கதநாய வடுகர* (நற். 212). 2. A caste of Telugu immigrants from the kingdom of Vijayanagar into the Tamil country in the 16th cent.; பதினாறாம் நூற்றாண்டில் விஜயநகர ராஜ்யத்திலிருந்துத் தமிழ்நாட்டிற் குடியேறிய ஒருசாரர் தெலுங்குசாதியார்.

வடுகரணம் vaṭukaraṇam, *n.* < *vaṭū-karaṇa.* Investiture with the sacred thread; உபநயனம். (யாழ். அக.)

வடுகவாளி vaṭuka-vāḷi, *n.* prob. வடுகர் +. A kind of ear-ring; ஒருவகைக் காதணி. (S. I. I. ii, 206.)

வடுகன்[1] vaṭukaṉ, *n.* < *vaṭuka.* 1. Bhairava; வைரவன். (பிங.) 2. Celibate student; பிரமசாரி. (யாழ். அக.) 3. Youth; வாலிபன். (யாழ். அக.) 4. Fool; மூடன். (யாழ். அக.)

வடுகன்[2] vaṭukaṉ, *n.* < வடுகு. Man from the Telugu country; தெலுங்க நாட்டான்.

வடுகன்றாய் vaṭukaṉ-ṟāy, *n.* < வடுகன்[1] +. Kāḷi, the mother of Bhairava; காளி. (திவா.)

வடுகி vaṭuki, *n.* < id. See வடுகன்றாய். (பிங.)

வடுகு[1] vaṭuku, *n.* < வடக்கு. [K. *baḍagu.*] 1. The region to the north of the Tamil country; தமிழ்நாட்டின் வடவெல்லையிலுள்ள நாடு. *வடதிசை மருங்கின் வடுகு வரம்பாக* (தொல். பொ. 650, உரை). 2. The Telugu country; ஆந்திரதேசம். 3. The Telugu language; தெலுங்குபாஷை. *வடகலை தென்கலை வடுகு கன்னடம* (கம்பரா. தனி.). 4. A dialect of Telugu; தெலுங்குபாஷைவகை. *கன்னடம வடுகு கலிங்கந் தெலுங்கம்* (நன். 272, மயிலை.). (தொல். சொல். 400, உரை.) 5. A Telugu-speaking caste; ஒரு தெலுங்கச்சாதி. (பிங.) 6. (Mus.) A secondary melody-type of the *marutam* class, one of four *maruta-yāḻttiram,* q. v.; மருதயாழ்த்திறத் தொன்று. (பிங.) 7. (Mus.) A melody-type. See இந்தளம்[2]. (பிங.) 8. (Nāṭya.) A dance; மெய்க்கூத்துவகை. (சிலப். 3, 12, உரை.)

வடுகு[2] vaṭuku, *n.* < வடு[1]. A flaw in a gem; இரத்தினக்குற்றவகை. (C. G.)

வடுகு[3] vaṭuku, *n.* perh. *vaṭū-karaṇa.* Investiture with the sacred thread; உபநயனம். *எழுமூன்று வடுகுசெய் திருக்கு வேதமுதல் . . . ஓதியே* (நல். பாரத. துட்டிய. 60).

வடுச்சொல் vaṭu-c-col, *n.* < வடு[1] +. Reproach; பழிமொழி.

வடுத்தலைக்கலவாய் vaṭu-t-talai-k-kala-vāy, *n.* perh. id. + தலை +. A sea-fish. See பன்றிமீன், 2.

வடுமாங்காய் vaṭu-māṅkāy, *n.* < id. +. A pickled preparation of green mangoes; மாவடு ஊறுகாய். *Colloq.*

வடுவக்கூடை vaṭuva-k-kūṭai, *n.* perh. வடுகன்[2] +. A kind of basket; கூடைவகை. (W.)

வடுவரி vaṭu-vari, *n.* perh. வடு[1] + வரி[1]. Bee, beetle, insect; வண்டு. (சது.)

வடுவன் vaṭuvaṉ, *n.* Corr. of வடுகன். See வடுகன்[2].

வடை vaṭai, *n.* prob. *vaḍā.* A cake made of black gram, fried in ghee or oil; உழுந்தாற் செய்யப்படும் ஒருவகைப் பண்ணிகாரம். *வடை வட்டுகம* (விநாயகபு. 39, 39).

வடைக்குத்தி vaṭai-k-kutti, *n.* < வடை + குத்தி[2]. A picker, used in frying cakes; பண்ணிகாரம் குத்தி யெடுக்குங் கருவிவகை.

வடைப்பருப்பு vaṭai-p-paruppu, *n.* < id. +. [T. *vaḍapappu.*] A salad of green gram split and soaked in water and seasoned with condiments; பயற்றம்பருப்புடன் எலுமிச்சம்பழ ரஸம்முதலியன சேர்த்துச் செய்யப்படுஞ் சிற்றுண்டி வகை.

வடைமாலை vaṭai-mālai, *n.* < id. + மாலை[3]. Garland of *vaṭai* offered in vow to deities, such as Mahākāḷar, Hanūmāṉ, etc.; பிரார்த்தனையின் பொருட்டு வடைகளைக்கோத்து மகாகாளர் அனுமார் முதலிய தெய்வங்கட்கு இடும் மாலை.

வடையம் vaṭaiyam, *n.* perh. id. 1. Cake, as of *nelli* fruits; நெல்லிப்பழம் முதலியவற்றை அரைத்துத் தட்டிய வடை. 2. Betel leaves and arecanut folded into a packet; பொட்டலமாகக் கட்டிய வெற்றிலைபாக்கு. *Tj.*

வடையற்றது vaṭai-y-aṟṟatu, n. perh. id.+அறு¹-. That which is useless; வீணானது. (யாழ். அக.)

வண்களமர் vaṇ-kaḷamar, n. <வண்-மை +. 1. Vēḷāḷas; வேளாளர். (திவா.) 2. Persons of Sudra caste; சூத்திரர். (யாழ். அக.)

வண்சிறை vaṉ-ciṟai, n. <வன்சிறை. Battlement; மதில். (சது.)

வண்டத்தனம் vaṇṭa-t-taṉam, n. <வண்டன்¹+தனம்¹. [T. bandatanamu, K. bandatana.] 1. Wickedness, impudence; குறும்பு. Colloq. 2. Lewdness; அசப்பியம். (W.)

வண்டப்புரட்டன் vaṇṭa-p-puraṭṭaṉ, n. <id.+. Consummate cheat; பெருமோசக்காரன். வண்டப் புரட்டாதா முறிதந்து பொன்னடகு வைககினுங கடனீந்திடாா (குமரே. சத. 4).

வண்டப்பேச்சு vaṇṭa-p-pēccu, n.<id.+. 1. Impudent talk; குறும்புப்பேச்சு. 2. Lewd talk; அசப்பியமான பேச்சு.

வண்டம் vaṇṭam, n.<vantha. A weapon. See தந்தம்⁵. (சங். அக.)

வண்டமை vaṇṭamai, n. Shell-fish; கடல் மீன்வகை. (சங். அக.)

வண்டயம்¹ vaṇṭayam, n. [T. pendiyamu, K. peṇḍeya.] Anklet; கழல். வீரவண்டயம் அணிந்த திருவடிகள் (திவ். திருப்பா. 17, அரும். பக். 162).

வண்டயம்² vaṇṭayam, n. See வண்டவாளம். அவன வண்டயமெல்லாம வெளிவந்துவிட்டது.

வண்டர் vaṇṭar, n. perh. vandin. 1. Panegyrists who keep the king informed of the time, by praising him at stated hours; அரசனுக்கு நாழிகையறிவிக்கும் சடிகையார். வண்டரு மோவரும் பாட (சீவக. 1844). 2. Panegyrists, bards; மங்கலபாடகர். (W.) 3. Warriors; வீரர். (நாமதீப. 139).

வண்டரம் vaṇṭaram, n.<vaṇthara. (யாழ். அக.) 1. Dog's tail; நாயின் வால். 2. Dog; நாய். 3. Cloud; முகில். 4. Breast; மார்பு.

வண்டரன் vaṇṭaraṉ, n. <vaṇḍara. (யாழ். அக.) 1. Eunuch; அலி. 2. Miser; உலோபி.

வண்டல் vaṇṭal, n. perh. மண்டு-. [T vaṇḍu.] 1. A girls' game of making toy-houses; மகளிர்விளையாட்டுவகை. (திவா.) தணமுறதத பேதை மடவாாதம வணடல் விளக்கயரும (ஐங். ஐம. 46). 2. Bevy of ladies; மகளிர்கூட்டம். (அரு. நி.) 3. Toy-house; விளையாட்டாக இழைத்த சிற்றில். தண் புனல் வணடலுயததென (ஐஙகுறு. 69). 4. Dregs, lees, sediment; silt, mud, mire, slush; நீர் முதலியவற்றினடியில் மண்டிய பொடிமண் முதலியன. வணடலபாய பொன்னி நாடனே (கலிங. 135). விய னதி வணடலாக (பாரத. பதினாறாம. 73). 5. Earth washed ashore by a river, lake etc.; நீரோதுக்கிவிட்ட மண். வணடலுண மணலதெள்ளி (திவ். நாய்ச். 2, 3). 6. Alluvial soil, capable of retaining moisture and of a light red colour; செம்மண்டரை. Loc. 7. Flake. See பொருக்கு, 2. (இலக். அக.) 8. Pebble; பருக்கைக்கல். (யாழ். அக.) 9. Whirlpool; நீர்ச்சுழி. (யாழ். அக.)

வண்டலடி-த்தல் vaṇṭal-aṭi-, v. intr. <வணடல+. 1. To spread alluvial deposit in fields, as manure; வயலுக்கு உரமாக வண்டல் பரப்புதல். (C. G.) 2. To become silted up, as a field; வயல் மண்மேடிடுதல். Colloq.

வண்டலம் vaṇṭalam, n. <id. Slush; சேறு. (யாழ். அக.)

வண்டலவர் vaṇṭalavar, n. <id. Girls at play; விளையாட்டு மகளிர். இரிவுற்றார் வணடிற்கு வணடலவா (கலித. 92).

வண்டலாயம் vaṇṭal-āyam, n. <id.+ஆயம்¹. A company of girl-playmates; விளையாடும் தோழியர் கூட்டம். வணடலாயமொ டுணடுறைத் தலைஇ (பெருமபாண. 311).

வண்டலிழை-த்தல் vaṇṭal-iḻai-, v. intr. <id.+இழை²-. To make a toy-house out of sand; மணலாற் சிற்றிலிழைத்து விளையாடுதல் (பொருந. 187, உரை.)

வண்டவாளம் vaṇṭavāḷam, n. [T. baṇḍavālamu, K. Tu. baṇḍavāla.] Loc. 1. State, condition, used in contempt; நிலைமை. 2. Capital, funds; முதல்.

வண்டற்படுகை vaṇṭaṟ-paṭukai, n. <வண்டல்+. Muddy bank of a river; வண்டலிட்ட ஆற்றங்கரை. (W.)

வண்டற்பாவை vaṇṭaṟ-pāvai, n. <id. +. Toy made of mud; வண்டலாற் செய்த விளையாட்டுப் பாவை. வணடற்பாவை வெளவலின் நுணபொடி யளைஇக் கடறாாப போளே (ஐஙகுறு. 124).

வண்டன்¹ vaṇṭaṉ, n.<vaṇtha. 1. Short, dwarfish person; குள்ளன். (இலக். அக.)

வண்டன்² vaṇṭaṉ, n. cf. மிண்டன். Brave man; திண்ணியன். (பிங்.)

வண்டன்³ vaṇṭaṉ, n. <வண்டு¹. Wicked person; தீயோன். வணடர் மும்மதின் மாய்தர வெய்தவன் (தேவா. 755, 7).

வண்டன்[4] vaṇṭaṉ, n. <vaṇḍa. Circumcised man; விருத்தசேதனம் பண்ணப்பட்டவன். (யாழ். அக.)

வண்டனான் vaṇṭaṉāṉ, n. <வண்டு[1]+அன்னான். Austere sage, as bee-like in nature; தபோதனன். (சீவக. 1632, உரை.)

வண்டாலம் vaṇṭālam, n. <vaṇṭāla. (சங். அக.) 1. Pick-axe. See குந்தாலி, 1. 2. Battle-axe. See குந்தாலி, 2.

வண்டாழ்ங்குருகு vaṇṭāḻṅ-kuruku, n. perh. வண்டானம்+. A kind of heron; குருகு வகை. வண்டாழ்ங் குருகினுடைய சேவல்களோடே (மதுரைக். 674, உரை).

வண்டாளம் vaṇṭāḷam, n. See வண்டவாளம், 1. Loc.

வண்டானம் vaṇṭāṉam, n. Pelican ibis; நாரைவகை. நாரை வண்டானை மெதிர்தத் தண்புனல (சீவக. 2108).

வண்டி[1] vaṇṭi, n. <பண்டி[1]. cf. pand. 1 Cart, carriage, bandy; சகடம். வண்டியை யேறினாள் (சீவக. 2054, உரை). 2. See வண்டிப்பாரம்.

வண்டி[2] vaṇṭi, n. <பண்டி[2]. Belly, stomach; வயிறு. (யாழ். அக.)

வண்டி[3] vaṇṭi, n. <மண்டி[2]. [T. maḍhi, K. bandu.] Sediment, dregs, lees; அடிமண்டி.

வண்டிக்கட்டு vaṇṭi-k-kaṭṭu, n. <வண்டி[1]+. 1. See வண்டிப்பட்டா. (W.) 2. A mode of tying a woman's braided hair; மகளிர் முடிந்துகொள்ளும் தலைமுடிவகை. Loc.

வண்டிக்கடுக்கன் vaṇṭi-k-kaṭukkaṉ, n <id.+. A large, circular, gold ear-ring; பொன்னாலியன்ற பெரிய வட்டவடிவான கடுக்கன் வகை. Loc.

வண்டிக்காரன் vaṇṭi-k-kāraṉ, n. <id +காரன்[1]. 1. Driver, bandyman; வண்டியோட்டுபவன். 2. Owner of a carriage; வண்டிக்கு உரியவன்.

வண்டிக்கால் vaṇṭi-k-kāl, n. <id.+கால்[1]. Cart-wheel; வண்டியின் சக்கரம். (W.)

வண்டிக்கீல் vaṇṭi-k-kīl, n. <id.+கீல். See வண்டிமசகு. Loc.

வண்டிக்கூடு vaṇṭi-k-kūṭu, n. <id.+. Top or cover of a cart; வண்டியின் மேற்கூண்டு.

வண்டிக்கொட்டகை vaṇṭi-k-koṭṭakai, n. <id.+. See வண்டிப்பேட்டை. (கட்டட. நாமா.)

வண்டிக்கொழுப்பு vaṇṭi-k-koḻuppu, n. <id.+. See வண்டிமசகு. (W.)

வண்டிகட்டு-தல் vaṇṭi-kaṭṭu-, v. intr. <id.+. 1. To yoke the bullocks to a bandy, as for a journey; மாட்டை வண்டியிற் பூட்டுதல். 2. To start, as on a journey; யாத்திரை முதலியன தொடங்குதல். Loc.

வண்டிச்சத்தம் vaṇṭi-c-cattam, n. <id. +சத்தம்[3]. Carriage hire; fare; வண்டிவாடகை.

வண்டிச்சவடு vaṇṭi-c-cavaṭu, n. <id.+சவடு[1]. See வண்டித்தடம். ஆன்குடிக்குப் போகிற வண்டிச்சவட்டுக்கு வடக்கும (Pudu. Insc. 420).

வண்டிச்செடிலாடல் vaṇṭi-c-ceṭil-āṭal, n. <id.+செடில்+. Swinging from hook in a machine mounted on a cart and rotated; வண்டியில் வைத்துள்ள செடிலில் ஆடுகை. (W.)

வண்டிசண்டி vaṇṭicaṇṭi, n. perh redupl. of வண்டி[3]. Clever person; கெட்டிக்காரன். Loc.

வண்டித்தடம் vaṇṭi-t-taṭam, n. <வண்டி[1] +தடம்[2]. Cart-track; வண்டிபோகும் சுவடு. Loc.

வண்டிப்பட்டா vaṇṭi-p-paṭṭā, n. <id.+பட்டா[3]. Tire of cart-wheel; வண்டிச்சக்கரத்தின் மேல் தைத்த இருப்புச்சட்டம்.

வண்டிப்பட்டை vaṇṭi-p-paṭṭai, n. <id. +பட்டை[2]. See வண்டிப்பட்டா. Loc.

வண்டிப்பாரம் vaṇṭi-p-pāram, n. <id.+பாரம்[2]. 1. Cart-load; வண்டியிலேற்றும் பாரம். 2. A unit of dry measure, varying from 480 to 500 Madras measures; பட்டணம் படி 480 முதல் 500 வரை கொள்ளும் தானிய அளவுவகை.

வண்டிப்பேட்டை vaṇṭi-p-pēṭṭai, n. <id. +. 1. Caravansari, enclosed halting place for travelling carts; பிரயாணவண்டிகள் தங்கும் இடம். 2. See வண்டிமேடு.

வண்டிப்பைதா vaṇṭi-p-paitā, n. <id.+. Cart wheel; வண்டியின் சக்கரம்.

வண்டிமசகு vaṇṭi-macaku, n. <id.+மசகு[2]. Wheel-grease; வண்டிச் சக்கரத் துவாரத் திடும் மை. Loc.

வண்டிமசி vaṇṭi-maci, n. <id.+masī. See வண்டிமசகு. Loc.

வண்டிமலைச்சி vaṇṭimalaicci, n. Fem. of வண்டிமலையன். A village goddess; ஒரு சிறு தேவதை.

வண்டிமலையன் vaṇṭi-malaiyaṉ, n. perh. வண்டி[2]+மலை[4]. A village god; ஒரு சிறுதெய்வம்.

வண்டிமேடு vaṇṭi-mēṭu, n. <id.+. Cart-stand; வண்டி நிற்குமிடம். Colloq.

வண்டிமை vaṇṭi-mai, *n.* <id.+மை². See வண்டிமசகு.

வண்டியகவாய் vaṇṭi-y-akavāy, *n.* <id. +. Axle-tree hole; வண்டிச்சக்கரத் துவாரம். (W.)

வண்டியம் vaṇṭiyam, *n.* perh. *bhiṇḍa*. Pink-tinged white sticky mallow. See பேராமுட்டி. (மலை.)

வண்டில் vaṇṭil, *n.* <வண்டி¹. 1. See வண்டி¹, 1. (W.) 2. Wheel; சக்கரம். (நாமதீப 461.)

வண்டு vaṇṭu, *n.* 1. [M. *vaṇḍu*.] Chafer, bee, of four kinds, viz., *vaṇṭu*, *curumpu*, *tēṉ*, *ñimiṟu*; வண்டு சுரும்பு தேன் ஞிமிறு என நால் வகைப்பட்ட அறுகாற் சிறுபறவை. *யாழிசைகொண்ட வினவண்டிமிர்ந் தாரப* (கலித். 131). 2. A kind of bee; நறுமணத்தை நாடிப் பறக்கும் அறுகாற் சிறு பறவைவகை. *வண்டுகொண மகிழ்ந்தே னினங்காள* (சீவக. 892). 3. A sub-sect of Maṟava caste; மறவருள் ஓர் உட்பிரிவினர். (புறநா. 263, உரை.) 4. Arrow; அம்பு. (பிங்.) *ஒழிகில வேளகர வண்டே* (வெங் கைக்க. 18). 5. Fault; குற்றம். (பிங்.) 6. Bracelet; கைவளை. (பிங்.) *கைவண்டுங் கணவண்டு மோடக் கலையோட* (ஆதி. உலா, 98). 7. Conch; சங்கு. (பிங்.) 8. Thread; நூல். (பிங்.) 9. The eighth *nakṣatra*. See பூசம். (பிங்.) 10. (Nāṭya.) A gesture with one hand in which the tips of the thumb and the ring-finger are joined and the little finger is held erect, while the fore finger and the middle finger are bent and held loosely together, one of 33 *iṇaiyā-viṉaikkai*, q.v.; பெருவிரலும் அணிவிரலும் வளைந்து நுனியொன்றிச் சிறுவிரல் நிமிர்ந்து சுட்டுவிரலும் நடு விரலும் நெகிழ வளைந்துநிற்கும் இணையாவினைக்கை வகை. (சிலப். 3, 18, உரை.) 11. (Nāṭya.) A hand-pose; அபிநயத்துக்கு உரிய அலிக்கைவகை. (சிலப். 3, 18, உரை பக். 92, கீழ்க்குறிப்பு.) 12. [K. *baṇḍu*.] Low, mean conduct; சிற்றொழுக்கம். (நாமதீப. 650.) 13. Coromandel redwood. See செம்மரம், 1. (M. M.)

வண்டு² vaṇṭu, *n.* cf. *bandha*. *Loc.* 1. Small coil of twisted straw used to catch what drops out while measuring grain; தானியம் அளக்கையில் கீழேவிழும் தானியத்தைப் பிடித்துக் கொள்ளும் வைக்கோற்கூடு. 2. Twist or bundle of straw thrown over the cover of a bullock-cart, as fodder for bullocks during the journey; பிரயாணத்தில் மாடுகளின் உணவாக வண்டியின் மேலிடும் வைக்கோற்பழுதை.

வண்டுகட்டு-தல் vaṇṭu-kaṭṭu-, *v. tr.* <வண்டு²+. To cover and tie up the mouth of a pot with cloth, in preserving things; பானையின் வாயைச் சீலையால் மூடிக் கட்டுதல்.

வண்டுகடி vaṇṭu-kaṭi, *n.* <வண்டு¹+கடி¹. 1. Sting of wasp or beetle; வண்டு கொட்டுகை. 2. Ringworm; மேகப்படை. *Loc.* 3. See வண்டு கொல்லி, 2. *Loc.*

வண்டுகடியிலை vaṇṭukaṭi-y-ilai, *n.* <வண்டு கடி+. See வண்டுகொல்லி, 2. *Colloq.*

வண்டுகுத்தி vaṇṭukutti, *n.* prob. வண்டு¹+குத்தி². A small bird; குருவிவகை. (சங். அக.)

வண்டுகொல்லி vaṇṭu-kolli, *n.* <id.+கொல்லி¹. 1. Large-leafleted eglandular senna. See சீமையகத்தி. 2. Ringworm shrub, m. sh., *Cassia alasa;* செடிவகை. 3. Deodar cedar, l. tr., *Cedrus libani;* மரவகை. (மலை.) 4. Champak. See சண்பகம். (மூ. அ.)

வண்டுச்சிலந்தி vaṇṭu-c-cilanti, *n.* <id. +சிலந்தி². A burning blister; ஒருவகைப் புண். (சீவரட். 354.)

வண்டுசுற்று-தல் vaṇṭu-cuṟṟu-, *v. intr.* <வண்டு²+. To make twists of straw and pack them; வைக்கோல் முதலியவற்றைப் புரியாக நெருங்கச்சுற்றிக் கட்டுதல்.

வண்டுணாமலர்மரம் vaṇṭuṇā-malar-maram, *n.* <வண்டு¹+உண்-+ஆ neg.+. (திவா.) 1. Champak. See சண்பகம். 2. East Indian kino; வேங்கைமரம்.

வண்டுநாணன் vaṇṭu-nāṇaṉ, *n.* <id.+நாண்². Kāma, as having a row of beetles for the string of His bow; [வண்டுகளை வில்லின் நாணாக வுடையவன்] காமதேவன். (நாமதீப. 59.)

வண்டுநெல்லி vaṇṭunelli, *n.* See வண்டு கொல்லி. (இங். வை.)

வண்டுருவன் vaṇṭuruvaṉ, *n.* <வண்டு¹+உரு³. Viṣṇu; திருமால். (நாமதீப. 50.)

வண்டுவிடு-தல் vaṇṭu-viṭu-, *v. intr.* <வண்டு²+. To twist straw; வைக்கோல் முதலிய வற்றைப் புரியாகத் திரித்தல்.

வண்டுளம் vaṇṭuḷam, *n.* East Indian rosebay. See நந்தியாவட்டம். (சங். அக.)

வண்டுறுக்கு-தல் vaṇṭuṟukku-, *v. intr.* <வண்டு¹+. To curl and bite one's lips; உதட்டைமடக்கிக் கடித்தல். *Tinn.*

வண்டுறை vaṇṭuṟai, *n.* perh. id.+உரை⁶. Inarticulate sound; எழுத்தில்லா வோசை. (சது.)

வண்டெச்சில் vaṇṭeccil, *n.* <id+எச்சில். Honey; தேன். *இளநீர் வண்டெச்சில் பயறப்பவகை* (திருப்பு. விநாயகர். 3).

வண்டேறுமலர் vantērā-malar, *n.* <id.+ஏறு-+ஆ. neg.+. Flower just blown, as not visited by the bee; அப்போழுதலர்ந்த மலர் (W.)

வண்டை[1] vantai, *n.* <வெண்டை. [K. *beṇde*] Lady's finger a plant; வெண்டை. (சங். அக.)

வண்டை[2] vantai, *n.* <வண்டு[1]. That which is corrupt or vulgar; கோச்சையானது. வண்டைப்பேச்சு. *Loc.*

வண்டையிழைப்புளி vantai-y-ilaippuli, *n.* perh. *bandhā*+. Beading plane; ஒருவகைத் தச்சுக்கருவி. *Loc.*

வண்டோதரி vantōtari, *n.* <*Mandōdarī.* The wife of Rāvana; இராவணனுடைய மனைவி. அழகமா வண்டோதரிக்குப் பேரருளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானை (திருவாச. 18, 2).

வண்டோலம் vantōlam, *n.* 1. See வண்டவாளம், 1. 2. One's antecedents; ஒருவனது பூர்வ சரித்திரம். உன வண்டோல மெல்லாம நன்றாய அறிவேன். *Tinn.*

வண்ணக்கச்சோலம் vanna-k-kaccōlam, *n.* prob. வண்ணம்+. One of 32 *ōmālikai*, q.v ; ஓமாலிகை முப்பத்திரண்டனுள் ஒன்று. (சிலப். 6, 77, உரை.)

வண்ணக்கட்சி vanna-k-katci, *n.* <id.+ கட்சி[1]. See வண்ணக்களஞ்சியம். என்போ வண்ணக்கட்சி (தமிழ்நா. 242).

வண்ணக்கம்மர் vanna-k-kammar, *n.* <id.+Pkt. *kamma*. Painters; வர்ணவேலை செய்வோர். வத்தநாட்டு வண்ணக்கம்மரும் (பெருங். உஞ்சைக். 58, 44).

வண்ணக்களஞ்சியம் vanna-k-kalañci-yam, *n.* <id.+. Poet, specially skilled in composing *vannam* verses; வண்ணக்கவி பாடுதலிற் சமர்த்தன். வண்ணக்களஞ்சியப் புலவர்.

வண்ணக்கன் vannakkan, *n.* prob. *varṇakā*. Tester of coins; நாணயசோதகன். வண்ணக்கன் சாத்தனார் (நற்.). வண்ணக்கா காணத்தை நீலமென்றலும் (தொல். சொல். 16, சேனா.).

வண்ணக்கிரமம் vanna-k-kiramam, *n.* <*varṇa*+. (சங். அக.) 1. Alphabetical order; அகராதிவரிசை. 2. Caste rules; சாதியொழுங்கு.

வண்ணக்குழிப்பு vanna-k-kulippu, *n.* <வண்ணம்+. (Poet.) A set or formal harmonic rhythm for *vannam* compositions; வண்ணச் செய்யுளின் சந்தவாய்பாடு. (W.)

வண்ணக்குனிப்பு vanna-k-kunippu, *n.* <id.+குனிப்பு[3]. See வண்ணக்குழிப்பு. (W.)

வண்ணகம் vannakam, *n.* <*varṇaka*. 1. Elaborate eulogy; வருணித்துப் புகழ்கை. (தொல். பொ. 452, உரை) (யாப். வி. 80.) 2. (Pros.) A member of *kali* verse. See அராகம்[1], 1. (வீரசோ. யாப். 11, உரை) 3. Sandal wood; சந்தனம் (யாழ். அக.) 4. Fragrance; வாசனை. (யாழ். அக.)

வண்ணகவொத்தாழிசை vannaka-v-ottālicai, *n.* <வண்ணகம்+. (Pros.) A variety of *kali* verse in which *arākam*, *tālicai*, *eṉ* and *vāram* are the main features; அராகம் தாழிசை எண் வாரம் என்னும் உறுப்புக்களைச் சிறப்பாகக் கொண்டுவரும் கலிப்பாவகை. (தொல். பொ. 452.)

வண்ணகூபிகை vanna-kūpikai, *n.* <*varṇa-kūpikā*. Ink-bottle; மைக்கூடு. (யாழ். அக.)

வண்ணச்சுவையமுதம் vanna-c-cuvai-y-amutam, *n.* <வண்ணம்+சுவை+. See வண்ணவமுதம். வண்ணச்சுவையமுதம் வைக (சீவக. 2604).

வண்ணஞ்சேர்ந்தோன் vannañ-cērn-tōn, *n.* <id.+சேர்[1]-. Virabāhu; வீரபாகுதேவர். (நாமதீப. 37.)

வண்ணடை vannatai, *n.* perh. *varṇa*+ ஆடை[1]. A superior kind of cloth; ஒருவகைத் துகில். (சிலப். 14, 108, உரை.)

வண்ணத்தரு vanna-t-taru, *n.* <வண்ணம் +தரு[3]. (Poet.) A kind of poetic composition; ஒருவகைப் பாடல். (யாழ். அக.)

வண்ணத்தான் vannattān, *n.* <id. [M. *vaṇṇattān*.] Washerman; dhoby; வண்ணான். ஸ்ரீவைஷ்ணவ வண்ணத்தான் திருப்பரிவட்டங்களை அழகிதாக வாட்டி (ஈடு, 5, 10, 6).

வண்ணத்துப்பூச்சி vannattu-p-pūcci, *n.* <id.+பூச்சி. See வண்ணாத்திப்பூச்சி. மயிற்புழுவி விருந்து வண்ணத்துப்பூச்சி பரிணமித்தாலென்ன (ஈச்சுரநிச்சயம், 167).

வண்ணதூதன் vanna-tūtan, *n.* <*varṇa* +. Messenger carrying letters; திருமுகங்கொண்டு செல்வோன். (யாழ். அக.)

வண்ணநீர் vanna-nīr, *n.* <வண்ணம்+நீர்[1]. Vermilion water sprinkled on festive occasions; அரக்குநீர். வண்ணநீர் கரந்த வட்டு (பரிபா. 11, 55).

வண்ணம் vannam, *n.* <Pkt. *vanna* <*varṇa*. 1. Colour; நிறம். வெளியாரமுன் வான்சுதை வண்ணங் கொளல் (குறள், 714). 2. Paint; சித்திரமெழுதற்குரிய கலவை. பலகை வண்ணநுண் டுகிலிகை (சீவக. 1107). 3. Unguent; pigment; சாந்துப்பொது. (யாழ். அக.) 4. Beauty; அழகு. பிறைநுதல் வண்ண மாகின்று (புறநா. 1). 5. Unadorned, natural beauty; இயற்கையழகு.

வண்ணமுந் தேசு மொளியுந் திகழ (பரிபா. 12, 20). 6. Adorning; decoration; ஒப்பனை. (அக. நி.) 7. Nature; character; quality; குணம். நிரலுடைமை யும வண்ணமும திணையும (குறிஞ்சிப். 31). 8. Good; நன்மை. (யாழ். அக.) 9. Merit, virtue; சிறப்பு. கைவண்ண மிகுக கணடேன (கம்பரா. அகலிகை. 82). 10. Thickness; கனம். யானைக் கையினளவு வண்ணமும் நீளமும் உள்ளது யாளியின் தும்பிக்கை. 11. Form, figure; வடிவு. (பிங.) 12. Caste; சாதி. (தொல். பொ. 82, உரை.) 13. Species; class; இனம். வண்ண வண்ணத்தமலர் (குறிஞ்சிப. 114). 14. Way, manner, method; வகை. தலைச்செல்லா வண்ணத்தால் (குறள், 561). 15. (Pros.) Verse rhythm; பாவின்க ணிகழும் ஓசை விகற்பம். (தொல். பொ. 313.) 16. (Pros.) Rhythmic verse with regular beats; சந்தப்பாட்டு. வண்ணத்திரட்டு. 17. (Pros.) A part of *kali* verse. See முடுகியல். (பிங.) 18. (Mus.) Melody; இராகம். (சது.) 19. Song; இசைப்பாட்டு. கோதை தானே யிட்டதோர் வண்ணந்தன்னை (சீவக. 1696). 20. Garland; மாலை. *Nāñ.* 21. Action; செயல். (இலக். அக.) 22. (Math.) Co-efficient; இத்தனை மடங்கு என்பதைக் குறிக்கும் எண். (W.)

வண்ணமகள் vaṇṇa-makaḷ, *n.* <வண்ணம் +. Lady's maid; கோலஞ்செய்வாள். வண்ண மகளி ரிடத்தொடு தம்மிடம் . . . கொள்ளார (ஆசாரக். 83).

வண்ணமாதிரு vaṇṇa-mātiru, *n.* <*varṇa-mātṛ.* (யாழ். அக.) 1. Pen, pencil; இலேகினி. 2. Female messenger; தூதி.

வண்ணமாதிருகை vaṇṇa-mātirukai, *n.* <*varṇa-mātṛkā.* Sarasvatī, the Goddess of Learning; சரச்சுவதி. (யாழ். அக.)

வண்ணமாலை vaṇṇa-mālai, *n.* <*varṇa-mālā.* The alphabet; நெடுங்கணக்கு. (சங். அக.)

வண்ணவமுதம் vaṇṇa-v-amutam, *n.* <வண்ணம் + அமுதம். Boiled rice mixed with dholl; பருப்புச்சோறு. (சீவக. 2604, உரை.)

வண்ணவுவமம் vaṇṇa-v-uvamam, *n.* <id.+. A simile in which the subject of comparison is colour; நிறம்பற்றிக் கூறும் உவமை. (தொல். பொ. 276.)

வண்ணவோதனம் vaṇṇa-v-ōtaṉam, *n.* <id.+. A preparation of cooked rice mixed with condiments. See சித்திரான்னம். (விதான. யாத்திரை. 8.)

வண்ணாத்தான் vaṇṇāttāṉ, *n.* <வண்ணாத் தான். Washerman; வண்ணான். (ஈடு, 4, 3, 5.)

வண்ணாத்தி[1] vaṇṇātti, *n.* Fem. of வண்ணான். Washerwoman; வண்ணாரப்பெண்.

வண்ணாத்தி[2] vaṇṇātti, *n.* <*varṇa.* 1. Washerwoman robin. See வண்ணாத்திக்குருவி, 1. 2. Fresh-water fish, silvery, attaining 4 in. in length, *Barbus ticto;* வெண்ணிறமும் நான்கு அங்குலவளர்ச்சியு முடைய ஆற்றுமீன். 3. A medicinal powder. See பூநீறு, 2. (யாழ். அக.) 4. See வண்ணாத்திப்பூச்சி. (W.)

வண்ணாத்திக்குருவி vaṇṇātti-k-kuruvi, *n.* <வண்ணாத்தி[2] +. 1. Washerwoman robin, *Thamnobia fulicata;* ஒருவகைப் பறவை. 2. White-browed fantail; விசிறிக்குருவி.

வண்ணாத்திப்பூச்சி vaṇṇātti-p-pūcci, *n.* <id.+. cf. வண்ணத்துப்பூச்சி. Butterfly; தட்டாரப்பூச்சி. *Loc.*

வண்ணாப்பண்டி vaṇṇā-p-paṇṭi, *n.* <வண்ணான் + பண்டி[1]. Washerman's cart; வண்ணார் துணிகளை யேற்றும் வண்டி. (யாழ். அக.)

வண்ணார்பந்தம் vaṇṇār-pantam, *n.* <வண்ணார் +. Torch made of rags. See துணிப் பந்தம்.

வண்ணார்பற்று vaṇṇār-paṟṟu, *n.* <id.+. Dhobi's itch, *Tinea circinata;* அரையில் வரும் மேகப்படைவகை.

வண்ணார்வரி vaṇṇār-vari, *n.* <id.+ வரி[5]. An ancient tax collected from washermen; வண்ணாரிடமிருந்து பெற்றுவந்த பழைய வரிவகை. (S. I. I. i, 81.)

வண்ணாரத்துறை vaṇṇāra-t-tuṟai, *n.* <id + துறை. See வண்ணான்றுறை. (W.)

வண்ணாரப்பாறை vaṇṇāra-p-pāṟai, *n.* <id.+. A petty cess; வரிவகை. (Pudu. Insc. No. 90)

வண்ணான் vaṇṇāṉ, *n.* prob. வண்ணம். Washerman, a person belonging to the washerman caste, dhoby, one of 18 *kuṭi-makkaḷ,* q.v.; குடிமக்கள் பதினெண்மருள் ஆடைவெளுக்கும் சாதி யான். (பிங.)

வண்ணான்றுறை vaṇṇāṉ-ṟuṟai, *n.* <வண்ணான் + துறை. Washerman's ghat in a river or tank; வண்ணான் ஆடைவெளுக்கும் நீர்த்துறை. (சினேந். 174.)

வண்ணானவுரி vaṇṇāṉ-avuri, *n.* prob. id. +. A plant; செடிவகை. (பெ. மாட்.)

வண்ணானழுக்கு vaṇṇāṉ-aḻukku, *n.* <id.+. Clothes for washing; வண்ணானிடம் வெளுக்கப்போடும் அழுக்காடை. (அறப். சத. 64.)

வண்ணி-த்தல் vaṇṇi-, 11 *v. tr.* <*varṇ.* 1. To describe. See வருணி-, 1. வண்ணித்தலாவ

தில்லா (சீவக. 2458). 2. See வருணி-, 2, 3, 4. 3. To expatiate; விரித்தல்.

வண்ணிகன் vaṇṇikaṉ, *n.* <*vaṇṇika.* Writer; எழுத்தாளன். (சது.)

வண்ணிகை vaṇṇikai, *n.* cf. வன்னிகை. A drug; மருந்துச்சரக்குவகை. வண்ணிகை வங்கப பாவை யோடு (பெருங. மகத. 17, 150).

வண்புகழ் vaṇ-pukaḻ, *n.* <வண்-மை+. Reputation for liberality; கொடையால் வருங் கீர்த்தி. வண்புகழ் மூவா (தொல். பொ. 391).

வண்மை vaṇmai, *n.* <வள். 1. Bounty, liberality, ஈகை. வண்மையு மன்ன தகைத்து (நாலடி, 269). 2. Quality, property, nature; குணம். (பிங.) ஈது . . . கருமஞ்செயவார வண்மை (திருவாத. பு. திருப்பெருந. 93). 3. Beauty; அழகு. (யாழ். அக.) 4. Truth; வாய்மை. (பிங.) வார்ா தொழியா னெனுமவ்வண்மையினுல (கம்பரா. உருக் காட். 6). 5. Fruitfulness, fertility, abundance, வளப்பம். (திவா.) (குறள், 239.) 6. Strength; வலிமை. (பிங.) 7. Praise, reputation; புகழ். (சூடா.) 8. Sirissa; வாகைமரம். (சங். அக.)

வணக்கம் vaṇakkam, *n.* <வணங்கு-. [T. *vangu*, K. *baggu*, M. *vaṇakkam.*] 1. Bending; வளைகை. வில்வணக்கந் தீங்கு குறித்தமையான் (குறள், 827). 2. Adoration, reverence; worship; வழிபாடு. குறைவிலா வெனனொடு வணக்கங் கூறி (கம்பரா. நைவ. 38). 3. Verses in praise of God, guru, etc., at the commencement of a work, one of *maṅkalācaraṇai*, q.v.; மங்களாசரணை மூன்றனுள் நூலின் முகப்பில் தெய்வம் குரு முதலிய வர்க்கு வணக்கங்கூறுகை. வாழ்த்தும வணக்கமும பொருளியல்புரைத்தலுமென மூவகைப்படுமே (சி. போ. பா. மங்க. பக். 1). 4. Obedience; submission; கீழ்ப்படிகை. (யாழ். அக.) 5. Respect, regard; கவுரவப்படுத்துகை. (யாழ். அக.) 6. Cant for an anna அணவைக்குறிக்கும் குழூஉக்குறி. *C. N.*

வணக்கவொடுக்கம் vaṇakka-v-oṭukkam, *n.* <வணக்கம்+. Deferential behaviour; வணங்கி ஒடுங்கி ஒழுகுகை.

வணக்கு[1]-தல் vaṇakku-, *5 v. tr.* Caus. of வணங்கு-. [T. *vantsuta*, K. *baggisu.*] 1. To bend, make flexible, as the body; வளைவித்தல். 2. To make submissive; பணியச்செய்தல். மழ புலம் வணக்கிய மாவண் புல்லி (அகநா. 61).

வணக்கு[2] vaṇakku, *n.* <வணங்கு-. 1. See வணக்கம், 1. வாளைப் பகுவாய வணக்குறு மோதிரம் (சிலப். 6, 95). 2. See வணக்கம், 2. வணக்கொடு மாள்வது வலமே (திவ். திருவாய. 1, 3, 8). 3. See வணக்கம், 3. நான்முகத்துரைக்கு மங்களாசரணை வாழ்த்து வணக்கொடு வத்து நிர்த்தேசம் (வேதா. சூ. 8).

வணங்காமுடிமன்னன் vaṇaṅkā-muṭi-maṉṉaṉ, *n.* <வணங்கு-+ஆ neg.+. See வணங்காமுடியோன்.

வணங்காமுடியோன் vaṇaṅkā-muṭiyōṉ, *n.* <id.+id +முடி. 1. Independent monarch, as bowing his head to no one; பிறர்க்குக் கீழ்ப் படாத அரசன். 2. Duryōdhana; துரியோதனன். (சூடா.) 3. Man of sturdy independence; ஒரு வர்க்கும் பணியாதவன்.

வணங்கு-தல் vaṇaṅku-, *5 v.* [K. *baggu.*] *intr.* 1. To bend; to yield, as a freed in a flood; நுடங்குதல். வணங்கிடை (பு. வெ. 7, 27). 2. To be submissive, gentle, modest; அடங்குதல். வணங்கிய வாயினார (குறள், 419). 3. To perform menial service; ஏவற்றொழில் செய்தல். நமமில்வந்து வணங்கி யும (கலித். 76).—*tr.* 1. To worship, adore, revere, salute respectfully; வழிபடுதல். எண குணத்தான் றாளை வணங்காத் தலை (குறள், 9). 2. To surround, encompass; சூழ்ந்துகொள்ளுதல். வணங்குசிப பிறப்பிவை நினையாது (திருவாச. 41, 6).

வணர்[1]-தல் vaṇar-, *4 v. intr.* 1. To bend; வளைதல். வணர்ந்தேந்து மருப்பின் (மலைபடு. 37). 2. To curl, as the hair; மயிர்சுழன்றிருத்தல். வெறிகமழ் வணரைம்பால் (கலித். 57).

வணர்[2] vaṇar, *n.* <வணர்-. Vault, arched roof; கட்டடவேலை வளைவு (W.)

வணிக்கிராமத்தார் vaṇikkirāmattār, *n.* cf. மணிகிராமம். An ancient guild of merchants; பண்டைக்காலத்துள்ள ஒரு வணிகர் குழு. (தொல். சொல். 167, உரை)

வணிகசூரியர் vaṇikacūriyar, *n.* <*vaṇik-sūrya.* Chief merchants, merchant princes; வைசியரில் முதன்மை பெற்றோர். வணிகசூரியரே வாரீர (திருவாலவா. 41, 18).

வணிகபதம் vaṇika-patam, *n.* <*vaṇik-patha.* Trade; வியாபாரம். (யாழ். அக.)

வணிகம் vaṇikam, *n.* <*vaṇij.* Trade; வியாபாரம். (W.)

வணிகர்குணம் vaṇikar-kuṇam, *n.* <வணி கர்+. See வணிகரெண்குணம். (பிங.)

வணிகர்தொழில் vaṇikar-toḻil, *n.* <id. +. Occupations of the Vaiśyas, six in number, viz., *ōtal*, *vēṭṭal*, *ītal*, *uḻavu*, *nirai-y-ōmpal*, *vāṇikam*; ஓதல் வேட்டல் ஈதல் உழவு நிரையோம் பல் வாணிகம் என்னும் வைசியரது அறுவகைத் தொழில். (தொல். பொ. 75, உரை.)

வணிகராறுதொழில் vaṇikar-āṟu-toḻil, *n.* <id.+ஆறு[3]+. See வணிகர்தொழில். (திவா.)

வணிகரெண்குணம் vaṇikar-eṇ-kuṇam, *n.* <id.+எட்டு+. Virtues desirable in merchants, eight in number, viz., *taṉimai-y-āṟṟal, muṉivilaṉ-ātal, iṭaṉ-aṟintoḻukal, poḻutoṭu-puṇartal, uṟuvatu-terital, iruvatañcāmai, īṭṭal, pakuttal;* தனிமையாற்றல் முனிவிலனாதல் இடனறிந்தொழுகல் பொழுதொடுபுணர்தல் உறுவதுதெரிதல் இருவதஞ்சாமை ஈட்டல் பகுத்தல் என்னும் வணிகரின் எட்டுக் குணங்கள். (பிங்.)

வணிகன் vaṇikaṉ, *n.* <*vaṇija.* 1. Person belonging the Vaiśya caste; வைசியசாதியான். (பிங்.) 2. Merchant, trader; வியாபாரி. 3. Libra of the zodiac; துலாராசி. (யாழ். அக.)

வணிகு vaṇiku, *n.* <*vaṇij.* See வணிகன், 1, 2. அதன்கண் வணிகொருவ னுளன் (மேருமந். 230).

வணிச்சியம் vaṇicciyam, *n.* <*vaṇijya.* Trade; வர்த்தகம். (யாழ். அக.)

வணிசம் vaṇicam, *n.* <*vaṇija.* (யாழ். அக.) 1. See வணிசை. 2. Ox; எருது.

வணிசை vaṇicai, *n.* <id. (Astron.) A division of time, one of 11 *karaṇam,* q v.; கரணம் பதினொன்றி லொன்று. (விதான. பஞ்சாங். 29, உரை.)

